சொற்பிறப்பு — ஒப்பியல்
தமிழ் — சிங்கள அகராதியை இ[illegible]வரும்,
இம்மொழிகளின் பொதுத்தாய் ஆகிய
"தொல்திராவிடம்" அன்றேல்
சீரிய, சிறந்த "தாமீழமொழியை"
விளக்குபவரும் ஆன
வண. கலாநிதி ஹயசிந்து சிங்கராயர்
தாவீதடிகளார்.



இவரைக் குறித்து [illegible]971 [illegible] ஆண்[illegible]
பத்திரி[illegible]களில் வெளி[illegible]
சிற்சில கட்டுரை[illegible]
இஃதிற் றேருள்[illegible]

தும்பளை புனித மரியாள்
J/VC/2/C

# I. தாமீழத்தின் முதன்மை: கலாநிதி தாவீதடிகளார்.

## (அ) புரட்சிகரமான முடிவு; பன்மொழிப் புலமையோரின் ஆராய்ந்த துணிவு. 19-10-71.

கைகளினின்று விரல்கள் விரிவனபோல், தாமீழம் அன்றேல் ''தொல்திராவிடம் முதல்'' எனும் மொழியினின்றே ஏனைய ஆசிய - ஐரோப்பாவின் மொழிகள் விரிந்தன என்பதை கலாநிதி ஹ. சி. தாவீதடிகள் மிகச்சுருக்கமாக இத்திங்கள் 11ஆம் நாள் காலை 9 மணியளவில் காட்டினரே. அதன்பின் தமது ஆராய்ச்சி நூலின்கண் விரிவாகவும் தெளிவாகவும் காட்டுவர். அந்நூலின் பெயர் - ''தமிழ் மக்களே நும்மொழியின் சான்ற சிறப்பை இன் இனியே முழுவதூஉம் உணர்மின்: ''தமிழெழுவ ஒப்பியலகராதி.'' 4 பாகங்கள் ஒவ்வொருபாகம்: விலை - ரூபா 10. சில பிரதிகள் மட்டும் வெளி வரும். ஆனதினால் இந்நூலை இப்பொழுதே வாங்கத் தயார் ஆகுமின், இவ் விளம்பரம் 31-7-70 இல் பத்திரிகைகளிற் றோன்றினபின் 1-ம் பாகத்தின் 960 பிரதிகள் விலையாயின: எஞ்சியவை 240 மட்டுமே.

## (ஆ) மிகப்பண்டைய ''முதல் தொல்திராவிடமும்'' ஏனைய ஐரோப்பிய - ஆசிய மொழிக்குடும்பங்களும்.

கி. மு. 6000-ம் ஆண்டளவில் மொழிக் குடும்பங்களின் விரிவு. 3000-ம் ஆண்டளவில் இது முடிவெய்தியது.

ஒரே கை விரிவதனால் ஐந்து விரல்கள் உண்டாவனபோல் இத் தாய்மொழி விரிவதனால் உண்டாகிய குடும்பங்கள், மொழியளவில் பின்வருவன என்க.

1. உரேலிய 42 மொழிகள். இவற்றை ''ஸ்கீத்திய, பின்னோ - உக்ரிய'' மொழிகள் எனவும் அழைப்பர் சான்றோர்.
2. சுமேரியம் இடம்: மெஸொபொதாமியா. இன்று ஈருக்; Irag முன் Mesopotaamiaa, முன் Sumer.
3. இரண்டாம் தொல்திராவிட 19 மொழிகள். கி. மு. 3000-ம் ஆண்டின் பின் ஒரே மொழியாயிருந்து கி. மு. 600-ம் ஆண்டளவில் 18ஆய் பிரிந்தது. கி. பி. 600-ம் ஆண்டில் மலையாளம் பிறமொழியாயிற்று, தமிழிலிருந்து வேறுபட்டு.
4. இந்து ஐரோப்பிய 45 மொழிக்குடும்பம்.
5. செமித்திய 15 ஆய்ப் பின் பிரிந்த மொழிக்குடும்பம். இவற்றில் அஸ்ஸீரியம், பபிலோனியம் (இரண்டும் சேர்ந்தால் ''அக்கா

தியம்'', எபிரேயம் கல்தேயம், அராபியம். இவை முக்கியமாய் ஆராயப்படும் எம்நூலின்கண். 2 வதான சுமேரியத்திற்கு அண்மையான ஈலாமியம், மித்தன்னி அன்றேல் ஹுூறியம், ஹிற்றைற் முதலிய மொழிகளும் தருணத்திற்கு ஏற்ப வருவன.

இவ்வைந்தில் முதல் மூன்று நடுவண் மிக நெருங்கிய தொடர்புகள் காணப்படும். 4 உம், 5 உம் மிக வேறுபட்டவையாயினும், **சில விடயங்களில்** தொல்திராவிடத்திற்கு அண்மையாயின என எம் சொற்பொழிவிலும் நூலிலும் காட்டுதும் யாம்,

ஹ. சி. தாவீதடிகள்.

# II. தாமீழம், சமஸ்கிரதம், லத்தீன் மொழிகள்: ஒப்பீடு.

*A When there are so many dictionares, why do you edit one more?" An answert to this question.*

''எமது சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி'' ; - கலாநிதி தாவீது அடிகள். இத்துணை அகராதிகள் இருப்ப, நீர் வேறொன்று இயற்றுவது எவன்? இதென்னே? என வினவுவோர்க்குச் சுருங்கப் பதில் யாம் இயம்புகின்றனம் இங்ஙனமே:- **1வதாக**, வெளியிடப்பட்ட தமிழ் அகராதிகள் நடுவண் தலைசிறந்தது சென்னையகராதியே. ஆயினும் இதில் அநேகம் பிழைகள் இருப்பதை இயற்றியோரிற் சிலரே எமக்குக் கூறியிருக்கின்றனர். ''பிழையிருப்பின் அதைத் திருத்தல் வேண்டும்,'' என யான் ஒன்பது வயது தொடங்கி எப்பொழுதும் கருதி வருகின்றேன். சென்னை யகராதியின் முக்கியமான பிழை யாதெனில், ஒரு சொல் ஆரியத்திலும் திராவிடத்திலுமிருப்பின் அது நிச்சயமாக வடமொழியினின்றே திராவிடத்துக்கு இறங்கினதென ''மூக்குச் சாத்திரம்'' போற் சாற்றுவதேயாம். இது குருடன் தன் பெண்டிரை அடித்ததையொக்கும். இதற்கு முற்றுமெதிராக யாம் ஒவ்வொரு பதத்தையும் ஆழச் செவ்வனே ஆராய்ந்து, சீர்தூக்கி ஆரியகிளை மொழிகளாய 45 இந்து ஐரோப்பிய மொழிகளையும், திராவிட 19 கிளை மொழிகளையும் துருவி, இவற்றில் பெரும்பான்மை திராவிடத்தில் இருந்தே ஆரியத்திற்கு வந்ததெனப் படிப்படியாகவும். தெளிவாகவும் காட்டுகின்றனம். எம் அகராதியின்கண் கி. மு. 1 300-ம் 900-ம் ஆண்டுகளிற் பாடப்பட்ட தொல் சமஸ்கிருத வேதங்களிற்றுனும் 75 திராவிடப்பதங்கள் களவாடப்பட்டன என எம் முதல் பாகத்தின் 75 பக்கங்களுள் யாம் நிருபிக்கின்றனம், இப்பகுதிகளைச் ''சங்கதக்களவியல்'' என தொல்காப்பியனுரைப் பின்



பற்றி அழைக்கின்றோம். படித்து இன்புறுமின், ஆயினும், ''களவியல்,'' தொல்காப்பியத்திலும் இதிலும் வெவ்வேறு கருத்தில் தோன்றும், ''சங்கதம், சமஸ்கிருதம், வடமொழி'' - இவைமூன்றும் ஒரே மொழியைத்தான் குறிப்பனவாகும். **2வதாக** இந்த நூற்றுண்டின்கண் சில தொல்மொழிகள், இதுகாறும் விளங்காமல் இருந்து, பிறின்ஸ் முஸ்ஸார்ணேல்ட் போன்றவரால் விளங்கப்பெற்றன. பிறின்ஸ் சுமேரியத்தையும், மற்றவர் அஸ்ஸீரியத்தையும் இனிதே படிப்பித்தனர். இம்மொழிகளில் திராவிடப் பதங்கள் அநேகமாகக் காணப்படுகின்றன. இதுமாத்திரமன்று. திராவிடத்தில் மட்டும் பெயர் இருப்ப, இவற்றில் வினையடிதோன்றும். இவற்றில் பெயர் அன்றேல் உரி இருப்ப, திராவிடத்திலோ வினையடி காணப்படும். இங்ஙனம் இம்மொழிக் குடும்பங்களும் ஒன்றையொன்று விளக்க வல்லனவே. மேலும் ''சாவ்'' (சான்றோர், சால) என்ற திராவிடப் பதம் அதே பொருளில் ஆரியம் (வி-சாலம்), சுமேரியம், அஸ்ஸீரியம், எபிரேயம், கல்தேயம், அராபியம், சமஸ்கிருதத்தின் சிதைவுகளான பாளி பிராகிருதங்களில் தோற்றுவதை நோக்குமின் ''வல்'' (வலிமை, வன்மை, வறட்சி) பொருந்திய தமிழ் சொல் சிங்களம், இலத்தீன், ஆங்கிலம், பிறெஞ்ச், ஸ்பானியம், இத்தாலியம், போர்த்துக்கேயம் போன்ற மொழிகளில் தோன்றுகின்றது. பெயர்போன பீலாத்தூஸ் திராவிடப் ''புல்'' எனும் பதத்தினின்று திருபு பெற்ற ''பீலும்'' என்ற சொல்லில் இருந்தே பிறந்ததெனக் காட்டுகின்றனம்.

## B. எம் அகராதியினின்று எடுக்கப்பட்ட ஒரு உதாரணம், 13-ம் பகுதி = புல்,

**(I) புல் = திணைரம், Grass familys, bamboo dry, parched up grass. meanness baseness.**

செ. அ. 2780-ம் பக்கம், ''புல்'' ''1'' 14-ம் பொருள் - கபில நிறம் = brown, tawony colour, காய்ந்த புல்லின் நிறம். இது வேறநேக திராவிடக் கிளை மொழிகளில் ''பொல்'' என வருவதை அவதானிக்குக. ''புல்வயலை''த் தமிழ், மலையாளம் ''புலம்'' என அழைக்க, கன்னடம் 'பொலம்' என்றும், தெலுங்கு 'பொலமு', கொலமி 'பொலம்', பர்ஜி 'பொலுய்', கட்பா 'பொல்லுப்' எனவும் அழைக்கின்றனவே. ஆனதினுற் சில சந்தர்ப்பங்களிற் :'உ/ஒ', என்பன திராவிடத்தில் மாறி வருகின்றனவே. அதன் கிளை மொழிகள், தமிழ். **மலையாளம், சிங்களம் கன்னடம். தெலுங்கு சமஸ்கிருதம்.**

முல்லை, முல்ல, மல்ல, மொல்ல, மொல்ல மல்லிகா. சமஸ்கிருதத்தில் ''உ,மு,பு,'' என்பன இருப்பினும் ''ஒ, மொ,பொ, என்பன இல.

ஆனதினுல் இக்கடையான ஒலிகளை ''அ, ம, ப'' என சங்கதம் மாற்றியமைத்ததே. இதுவே ''மல்லிகா என்ற வடமொழியின் உற்பத்தியாகும். ''மொல்ல'' என்பதே தொல் திராவிடம். கன்னடம் தமிழினின் இதற்கண்மையாயிருத்தலை நோக்குக. எங்ஙனம் திராவிட 'மொ'' வடமொழியின்கண் ''ம'' என திரிபு பெற்றதோ, அங்ஙனமே **''பொல்** (தொல் திராவிடம் - தமிழில் 'புல்') வடமொழியில் **''பல்''** ஆயிற்று. இப்போது மொனியர் வில்லியம்ஸின் சமஸ்கிருத அகராதியின் 717, 718-ம் பக்கங்களைத் துருவுமின்:-

**Phatl,** Phal, Phul, என்ற மூபதங்களும் அதில் ஒரே ஒரு வினையடியாகக் கொடுக்கப்பெற்றன. இவை (phal / phul) திராவிட ''பொல்'' / ''புல்'' என்ற வினையடிகளினின்றே களவாடப்பட்டனவென்று கொள்வதற்கு இம்மாற்றமைத்தலே [ஆரியம்: phal/ phul= திராவிடம்: pol/pul ] இன்னுமொரு சான்ருகும்.

எனவே (a) பல்கு 1=''கபில நிறம்'', தைத்திரீயஸம்கிதா, சங்கத வேதநூல். (b) பல்கு 2 = ''புல்'' போன்ற இழிவிப் பொருள், ''அற்பம், ''வாஸஜநேயி ஸம்கிதா. (c) (உரிச்சொல்) ''பல்குன'' = கபில நிறத்த. மேற்கூறிய இரு வேதநூல்களிலும் தோன்றும். இத்திராவிடத்தினின்று எடுக்கப்பெற்ற சமஸ்கிருதப்பதங்கள். (d) ''பங்குநீ'' = பங்குனித்திங்கள், 4-ம் சங்கவேதநூல்: அத்தர்வ வேதம். (e) ''பல்குநீப் பூர்ணமாஸ'' = உத்தரப் பங்குனிப் பௌரணை தைத்திரீயஸம்கிதா. இவை எம் அட்டவணையில் 60-64-ம் சங்கத வேதப் பதங்கள், திராவிடத்தினின்று ஆரியத்திற்கு 1,800-900ம் (கி. மு.) ஆண்டுகளில் இறங்கியவை. இதின் பிறப்பு ''காய்ந்த புல்''. பங்குனி காய்ந்த புல்லின் முதற் திங்களாதலின்.

(2) **''பீலாத்தூஸ்.''** அகநாநூறு என்ற சொல் தமிழிலக்கியத்தில் ''புல்'' ஆறடி மூங்கிலையும் குறிக்கின்றதே. ஆனதினுல், (செ. அ. பக். 2781) ''புல்லா'' (தமிழில்) = புல்ல (தெலுங்கு) = ''ஆறடி நீட்டலளவைக்கோல்'', ஆதியில் மூங்கிற்கோல் போலும். உரோமரின் வேலாயுதம் அந்நீட்பமானதினுல் அதற்கும் இப்பெயர் உபயோகிக்கப்பட்டது. இக்கருத்துக்குபருேவும் எமனுேவும் தம்திராவிட அகராதி (285ம் பக்கம்.) 3528-ம் இலக்கத்திற் சான்ருகின்றனர். மேலும் குடகு ''பில்லி,'' தெலுங்கு ''பில்லு'' போன்றவை புல்லையே குறிக்கின்றன. ஆனதினுல் தென் இந்திய - ஈழத்து மாலுமிகளினின்று ''வல்'', ''புல்'' என்ற திராவிடப் பதங்களை உரோமர் கி. மு. 300-ம் ஆண்டளவில் பினீஸிய கார்த்தாகின வியாபாரிகள் மூலம் பெற்றபொழுது, அதைப் போலப் ''பீல்'' என்ற திராவிடப் பதத்தையும் அவர் எடுத்தது வியப்பைத் தராதே. ''பீல்'' போன்ற வேலன்தான் ''பீலாத்தூஸ்.'' ஆனுல் நீண்ட புல்லாய



மூங்கிலைப் போல் காற்றிலிரு பக்கமும் ஊஞ்சலாடி **புல்லிய**, கோழையாகி, **புல்லன்** ஆனுனே ''பீலாத்துஸ்''. ''பீல்'' ஆகிய வேலை உரோமர் ''பீலும்'' என்றும், அவ்வேற்படையுடையோனை ''பீலாத்துஸ்'' என்றும் அழைத்ததிற் சற்றேனும் வியப்பில்லை.

# III. தூவீதடிகளார்க்குச் சென்றவிடமனைத்தும் சிறப்பே!

செல்லும் முன்புஞ் சிறப்பாயிற்று:

30 - 4 - 71.

இந்தியாவிலிருந்த

**திரு. வித்துவான் ஆர். எல். ஆரோக்கியம்பிள்ளை** தூத்துக்குடி,

(தென் இந்தியா) இவருக்கெழுதிய திருமுகத்தைப்படியுமின்,

ஆசிரியர் அவர்களுக்கு,

மொழியாராய்ச்சித்துறையில் மேருமலை போல் விளங்கிய சுவாமி ஞானப்பிரகாசரின் சீடராகிய தாங்கள் அவர்கள் விட்டுச்சென்ற அகராதியைச் சுருக்கமாகப் புதிய முறையில் வெளியிட முன் வந்திருப்பது கண்டு பெரிதும் மகிழ்கின்றேன். தமிழுலகமும், மொழியாராய்ச்சி உலகமும் தங்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது.

சுவாமி ஞானப்பிரகாசரின் ஆராய்ச்சி முடிவுகள், அவர்களைப் போல் பன்மொழிப் புலமையும், சொற்களை ஒப்புநோக்கி மகிழும் திறனும், மொழியாராய்ச்சியில் ஊக்கமும், நடுநிலைமை வாய்ந்த உள்ளமும் உடையவர்க்கே புலனுகும் என்பது சுவாமி அவர்களின் அருகில் அமர்ந்து பணியாற்றிய தங்களுக்கும் தங்களைப் போன்றவர்க்குமே விளங்கும் உண்மை. ஏனெனில் சுவாமி அவர்கள், தாங்கள் கூறியவாறு, ''அரிமா நோக்கம், தவளைப் பாய்ந்து, பருந்தின் வீழ்வு'' என்னும் சூத்திர நிரைகளைத் தம் அகராதியிலும் கையாண்டுள்ளார் என்ற உண்மை யாவர்க்கும் தெரிந்த ஒன்றேயாம்.

மொழியாராய்ச்சிக்குச் சுவாமியவர்கள் வகுத்த எட்டுக் கட்டளைகளுடன், 2, 5, 7ஆம் கட்டளைகளுக்கு மேலைத்தேச மொழியியல் வல்லுநர் எழுப்பும் தடைகளைக் குறைத்தும், விதிவிலக்குகளை ஏற்றும், சுவாமியவர்களின் பணியை உலக மொழியியல் வல்லுநர்முன் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எளிய உரைநடை வடிவிலும் அமைத்துத் தருகின்றமை ஒன்றே தங்கள் அரிய நற்பண்புகளையும் மொழிப் புலமையையும் காட்டப் போதுமானதாகும்.

முப்பத்திரண்டு மொழிகளில் திறமான புலமை பெற்றுள்ள தாங்கள் மூலச் சொல்லைத் துருவி, ஆராய்ந்து, அதனின்று இணைந்த சொற்களையும் கண்டு கூறும் இவ்வரிய பணியால் ''உலகில் ஆதியில் நிலவிய மொழி ஒன்றே: உலகில் வழங்கும் மொழிகளெல்லாம் அதன் குடும்பமே,'' என்னும் உண்மை உலகில் பரவும் அந்நாளில், ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் கோட்பாட்டுக்கு இணங்கும் ஒரே வரலாறாக அல்லது காதையாக விளங்கும் ஆதியாகமத்தின் பொருளும் விளங்கும் என்றே கருதுகின்றேன்.

அந்நாள் விரைவில் வர இறைவன், தாங்கள் தொடங்கிய பணியை இனிது நிறைவேற்றுதற்குரிய எல்லா நலன்களையும், ஆற்றலையும், துணையையும் அருளுமாறு வேண்டுகின்றேன்.

**வித்துவான். ஆர். எல். ஆரோக்கியப் பிள்ளை.**

# IV. இவரைத் தெரியுமா?

" நிர்மலன் ":
ஒரு திங்கள் - திங்களாக வெளியிடுங் கட்டுரைகளின் -
அமைப்பாகிய சஞ்சிகையில் வெளி வந்த கட்டுரை.
அதின் தலைப்பு :

''இவரைத் தெரியுமா ?''

இலண்டன் மாநகரில் எம். ஏ. (சமஸ்கிருதம்) படித்துக்கொண்டிருந்த போதகர் ஒருவர், **Phd** செய்ய ஆசைப்பட்டார். இதுபற்றி ஆலோசனை கேட்கத் தனது பேராசிரியரிடம் சென்றார். பேராசிரியர் **Alfred Master** ''என்ன விசேஷம்?''என்று வினவப் போதகர் தனது கலாநிதிப்பட்ட ஆய்வு பற்றிய விடயத்தைக் கூறினார். இலண்டன் சர்வகலாசாலையின் சிற்றறையொன்றில், 14 - 2 - 1949இன் பிற்பகல் 3 மணியளவில் பேராசிரியர், ''வடமொழியால் விற்பன்னராகிய நீர் அந்த மொழியிற்றானே ஆய்வு நிகழ்த்திப் phd பட்டம் பெறுவது சாலச் சிறந்தது,'' என்றார். போதகர் தனது விருப்பம் அதனைத் தமிழிற் செய்ய வேண்டுமென்பதே யென்று எடுத்துரைத்தார், இதற்கு முழுதும் மாறாக.

''தங்களின் தமிழறிவு எதுவரை?'' என்று கேட்டார் அலுபிறேற் பேராசிரியர். ''தமிழில் நான்காம் வகுப்பு'' என்று அமைதியாகப் பதிலுரைத்தார் எம் போதகர். ''என்ன? நான்காம் வகுப்புத் தமிழுடன் ஆய்வு நிகழ்த்திப் பட்டம் பெறவா?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார் பிராகிருதப் பேராசிரியர், **Mr. Alfred Master, Mill Hill London (North),**



''முயலாது வைத்து முயற்றின்மையாலே
உயலாகா ஊழ் திறத்த என்னார்'' என்ற நீதி நெறி விளக்கச் செய்யுள் ஐம்பதின் முதலிரு அடிகளைப் பதிலாகக் கூறினார் போதகர். முயற்சிக் குறைவாற் பெறுதலைத் தேவவிதியெனக் கூறார் சான்றோர்'' என்பதே இச் செய்யுளின் பொழிப்பாகும்.

''என்ன இது? இதுவோ ஒரு கஷ்டமான செய்யுள். இது நான்காந்தரத்துக்குரியதன்று, B. A. பட்டத்துக்கேயுரியது'' என்றார் பேராசிரியர். ''நான் இதனைத் தங்களைக் காண்பதற்கு 30 நிமிடங்களின் முன் - தான் என்னிடமிருந்த புத்தகத்திற் கண்டேன்'' என்றார் போதகர். கண்டதை இப்படிச் சரியான சந்தர்ப்பத்தில் உபயோகிக்கக் கூடிய ஆற்றல் உமக்கு இருக்கும் பொழுது, கலாநிதிப் பட்டம் பெறுவது மட்டுமன்று, நீர் என்னைப் போன்ற பரீட்சகனாகவும், ஏனையோரின் கலாநிதித் தேர்வில் கடமையாற்றும் பேராசிரியராகவும் வருவீர்'' என்றார் பேராசிரியர்.

இந்தத் தீர்க்க தரிசனமான வசனத்திற்கொப்ப 1962-ம் ஆண்டு முதல், சென்னைச் சர்வகலாசாலையின் கலாநிதித் தேர்வின்கண் பரீட்ஷகராகவும், சிறந்த ''தமிழ் - எபிரேயு ஒப்பியல் - சொற்பிறப்பு இலக்கண-அகராதி''யை ஆக்குபவராகவும் இவர் கடமையாற்றி வருகிறார். இவர் தான் தவத்திருதாவீதடிகள். இப்போது இவர் **இவ்வகராதி-இலக்கணத்தின்** முதற் பாகத்தைத் தமிழ் மொழியில் வெளியிட்ட பின்னர் மூன்றும் பாகத்தை தமிழிலும் 2-ம் 4-ம் பாகங்களை ஆங்கிலத்திலும் வெளியிடுவதற்காக புனித பத்திராசிரியர் கலாசாலையில் திரும்பவும் வாழ்கின்றார். காலை 8-15 தொடக்கம் பிற்பகல் 4-15 மட்டும் இவரை ஆங்கண் காண வருபவர்களை அன்புடன் அரவணைத்து ஏற்றுக் கொள்வார். இவரில் அநேகர் ஈடுபட்டுள்ளனர். உதாரணமாக:-

(அ) ''மல்லிகை ஆசிரியர் டோமினிக் ஜீவாவின் அலுவலகம் இருப்பது 60, கஸ்தூரியார் வீதி, யாழ் நகரின்கண். ஆங்கண் நின்றே அவர் தம் ''கலை - இலக்கிய'' மாத இதழைப் பரப்புவதை யாம் ''அங்கண் விசும்பின் அகல் நிலா பாரிக்கும் - திங்கள்'' எனக் கூறுமலே விளங்கும் இச்சஞ்சிகையாசிரியர் எம் அடிகளாரைக் கண்டும் இவரின் சொற்பொழிவுகளை செவிமடித்து மிருத்தலின் பயனாக, தம் ''மாசி 1971'' இன்கண் ''மல்லிகை''யின் அட்டைப் படத்தைத் தாவீதடிகளுக்கு சமர்ப்பிக்கின்றனர். இதில் இலங்கையின் பிரபல படைப்பாளிகள் எழுதுகின்றமையால், தாவீதடிகளாரின்

''தமிழ் எளுவ சொற் பிறப்பு - ஒப்பியல் இலக்கண் - அகராதி'' இப் படைப்புகளின்கண் தலைசிறந்த தென்பதே எம் தோமினிக் ஜீவாவின் கருத்தென்பது இயம்பாமலே விளங்குமன்றோ! (ஆ) ''ஈழநாடு'', 23 - 8 - 71, பக்கம் 5, ஒடை 3 - 4, கீழ்ப்பாகம் ½ யில்: ''கோட்டை, ஞாயிறு, நீர்ப்பாசனத்துறைத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்திய சிறப்புப் பொதுக்குழுவின்கண் வணக்கத்துக்குரிய கலாநிதி ஹ. சி. தாவீதடிகளின் தமிழ் எளுவ சொற்பிறப்பு - ஒப்பியல் இலக்கண-அகராதி'' எனும்பிரபல்ய சீரிய சிறந்த முதல் நூலின் ஆக்கத்திற்கான முயற்சிக்கு ரூபா 2,000 கலாநிதியின் அச்சகத்திற்கு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இம்முயற்சிக்கு இயக்கரீதியில் கொடுக்கப்படும் முதலாவது பெரிய தொகை இதுவே. இதைத் தொடர்ந்து ஈழத்தய மற்றைய கழகங்களும், சங்கங்களும், தனிப்பட்டவர்களும் இந் நிதிக்கு தம்மாலியன்ற உதவியளிக்குமாறு விண்ணப்பிக்கப்பட்டனர். இத்துடன் தாவீதடிகள் நீண்ட ஆயுள் பெற்றுத் தமிழ்த் தொண்டினைத் தொடர்ந்து ஆற்ற இறையருள் அவரை அடைவதாக என்றும் பிரார்த்திக்கப்பட்டது.'' என்பதைக் காணலாம்.

(இ) தனிநாயகமடிகளின் மருமகள் ''நிர்மலா'' ''ஈழநாடு,'' 19 - 9 - 71, பக்கம் 7, 10): மொழி ஆய்வின் மூலம் இன ஒற்றுமை காணும் தாவீதடிகளார். ''32 மொழிகளில் பாண்டித்தியமுடைய இவர், தம் ஆய்வுகள் மொழிக்கும் ஈழநாட்டிற்கும் ஒருங்கே பெரும் நன்மை பயக்கும் என்கின்றனர்.'' இவ்வண்ணம் இவ்வகராதி தமிழைக் கசடறக் கற்பதற்கவசியமே என விளக்கிப் போந்தனர். நிர்மலா, வண. கலாநிதி தாவீதடிகளாரின் 3 - 8 - 70இன் கோப்பாய்ச் சொற்பொழிவைச் செவிமடுத்த பின்றை, அத்தினம் 62 கோப்பாய்ப் பெருங்கலாசாலை மாணவிகள் ஒருங்கே இவரின் முதல் நூலை வாங்கினர். இப்போதோ 963 பிரதிகள் விலையாயின. நிர்மலாநாதன் வண. கலாநிதிதனிநாயகம் அடிகளாரின் மருமகளாவர்,

## ''தமிழ் வளர்க்கும் திருப்பணியில் தமிழ் முனிவர் தாவீது அடிகள்.''

''சுதந்திரன், 27 - 12 - 70.

சுவாமி ஞானப்பிரகாசரார் தொடங்கிய தொண்டினை முடித்து வைப்பதற்கு இடையருது உழைக்கிருர் இவர். 'உலையா முயற்சிகளை கணு ஊழின் வலிசிந்தும் வன்மையுமுண்டே'' உலகத்தை மறந்து, உற்றுர் பெற்றுரை மறந்து எங்கேயொருவூரின் மூலையின்கண் காலமெல்லாம் அந்தக் கடவுள் நாமத்தையே உச்சரித்து உயிரைப் போக்கிய துறவிகளின் வரலாறு



கள் பல பல்வேறு மொழிகளிலுள. ஆனுல் தமிழ்மொழி இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரையில் துறவிகளின் தமிழ்த் தொண்டு அளவிடற்கரிய தொன்ருகும். அவை போதனையாக இருந்தாலும் தமிழ் இலக்கியச் சாதனையாகத் திகழ்கின்றமை யாம் காண்டல் கண் கூடு.

துறவறம் பூண்ட இளங்கோவின் சிந்தனைக் கருவூலம்தான் சிலப்பதிகாரம் எனக் காண்கிறோம்; மதமாற்றம் செய்யவந்த வெள்ளைக்காரத் துறவியாம் வீரமாமுனிவரின் இலக்கியப் பெட்டகம்தான் தேம்பாவணியெனப் பார்க்கின்ருேம். ''தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவ'' அயராது உழைக்கும் துறவி தனிநாயகத்தின் தொண்டுதனை இன்று கண்டும் கேட்டும் களிப்படைகின்ருேம்.

இவ்வாறு துறவிகளின் தமிழ்த் தொண்டு இலக்கியப் படைப்புடன் மட்டும் நின்ற காலையில் தமிழின் பாரம்பரிய வரலாறு, அதற்கும் உலகமொழிகள் அனைத்திற்கும் உள்ள தொடர்பு, இவை தக்க சான்றுகளுடன் நிரூபிக்கப் படல்வேண்டும் என்ற எண்ணம் ஓர் துறவியின் சிந்தனையில் ஊற்றெடுத்தது: அவர்தான் அடிகள் ஞானப்பிரகாசியார். ஆனுல் அன்னுரின் ஆராய்ச்சி முற்றுப்பெற முன்பே காலன் அவரைக் கவர்ந்து சென்றுவிட்டான்.

### மாமேதை தாவீதின் மொழி ஆராய்ச்சி

கலங்கினுள் தமிழ்த்தாய். கவலை கொண்டது தமிழ்கூறும் நல்லுலகம். ஆனுல் கலங்கிய தமிழ்த்தாயின் கண்களுக்கு, யாழ்நகரின் எங்கோ ஒரு மூலைதனில், சின்னஞ்சிறு அறையிலே தன்னந்தனியனுக ஏதோ பழம்பெரும் சுவடிகளைப் பல்வேறு மொழி ஏடுகளைப் புரட்டிய வண்ணம், சிந்தனையே உருவாகச் செயலாற்றுகின்ற வெண்நிற ஆடைதரித்த கத்தோலிக்க மதக்குரவரின் தோற்றம் சற்றே உணர்வையும், உற்சாகத்தையும் அளித்ததெனின் வியப்பன்று; அவர்தான் கலாநிதி தாவீது அடிகள்.

அவர் என்ன அப்படி ஆண்டவரின் வரலாற்றை ஆராய்கின்ருரா? அன்றேல் பக்தர்கட்கு பரலோகத்தைக் காட்ட ஓர் குறுக்கு வழி காண முயற்சிக்கின்ருரா? ஆம்! அவர் ஆராய்ச்சிதான் செய்கின்ருர்? ஆனுல் அதுவோ மொழியாராய்ச்சி. அடிகள் ஞானப்பிரகாசியார் தொடக்கி வைத்த அரும்பெரும் ஆராய்ச்சியை முடித்து வைக்க முயலும் தீரப் பெருமுயற்சி இவரின் இதுவே.

கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி என்றதொரு தமிழ்ப் புலவன் கூற்று. இக்கூற்றதனை என்

பிக்க, பல்வேறு உலக மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கி ஒரு புதிய வரலாறு படைக்க முயலும் புது முயற்சியே இவரின் முக்கிய முயற்சியாகுமன்றோ!

''உலக மொழிகள் அனைத்திற்கும் தமிழே தாய்'' என இம்மொழி மேற் தான்கொண்ட பற்றால், பாசத்தால் கூற முனையும்சாதாரண தமிழ்ப்பித்தன் அல்லர் கலாநிதி தாவீது அடிகள். உலகநாடுகள் பல சென்று, பல்வேறு மொழிகளைப் பயின்று, தமிழ்மொழி ஆராய்ச்சியில் கலாநிதிப்பட்டம் பெற்று, 32 மொழிபடித்த மாமேதையே தாவீதடிகள்.

## 32 மொழிகற்ற பன்மொழிப் புலவர்.

ஒரு மொழிமட்டும் தெரிந்த ஒரு மனிதன் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' எனின், சிரிப்பார் சிலர், பழிப்பார் பலர். ஆனால் மொழியாராய்ச்சியுள் புகுந்து, அதன் வரலாற்றை, பிறப்பிடத்தை உலக மொழிகட்குள் முதுமொழி எது எனும் கருத்தை அறியத் துடிக்கும் அடிகள் தாவீதே முப்பதிற்கு மேற்பட்ட மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற ஒரு பன்மொழிப் புலவர். இவ்வாறு 32 பல்வேறு மொழிகள் தெரிந்தகாரணத்தினால் தான், அவர் தன் தாய் மொழியாம் தமிழ் மொழியின் சிறப்பினை, அழகினை, முதுமையினை, இளமை குன்றாத் திறனை, மற்றைய மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கும் திறனுடையவராகத் திகழ்கின்றார்.

இன்று அன்னாரின் அரும் பெரும் முயற்சியின் முதற் படைப்பு 'சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி' என்ற தலைப்பில் அச்சுவாகனம் ஏறிக்கொண்டிருப்பதைக் கண்டு தமிழ் அறிஞர்கள் பெருமைப்படுகின்றனர்.

அடிகள் தாவீதும் தனது முயற்சியில் தொடர்ந்து முன்னேறிக் கொண்டேயிருக்கின்றார். முதுமை நிலையடைந்துங்கூட. அவர் பல மொழிகளைப் படித்துக் கொண்டே தன் ஆராய்ச்சியில் இடுக்கண் நடுவண் முன்னேற வேண்டியிருக்கிறது. காரணம் ஏது? அவர் மலிந்த, எளிய இலகுவான, நாவலையோ, அன்றேல் ஓரினிய கவிதைத் தொகுப்பையோ உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை; அதற்குப் பதிலாக, மொழிகளின் பிறப்பு வளர்ப்பைத் தேடித்துருவி. முதுமொழி, அதுவும் முதல்மொழி, எதுவெனும் அரும்பெரும் முயற்சியில் அவர் ஈடுபட்டுக் கொண்டேயிருப்பதாகும் இதின் நியாயம்.



## சிறந்த பணிபுரியும் சிந்தனையாளர்

இத்தகைய உன்னத பணியில் ஈடுபட்டிருக்கும் துறவி தாவீதின் இலட்சியம்தான் உயர்ந்ததெனில், அவர் உள்ளமும் அவ்வாறேயெனின் வியப்பன்று. கவலையுடன் தன்னைக் காணவரும் ஏழையின் கண்ணீர்த் துளிகளிலே அவர் கடவுளைக் காண்பார். ஏழ்மையில் வாடும் எளிய மக்களின் இல்லங்கள் தோறும் சென்று, அவர்கட்கு ஆறுதல் கூறுவதால், ஆலயத்தில் புகுந்து ஆண்டவனோடு அளவளாவுவது போன்ற மகிழ்ச்சியையும் ''வருந்திச் சுமை சுமப்பவர்களே என்னண்டை வாருங்கள்'' என்ற யேசுவின் கூற்றை நிறைவேற்றுகிறோம் என்ற திருப்தியையும் இவர் பெறுகிறார் போலும். பஞ்சணையில் படுத்து, பகட்டான காரிலே பவனிவந்து மதபோதனை செய்யத் தெரியாத இம்மதகுரவர் அணிந்திருக்கும் வெள்ளைநிற அங்கியின் எண்ணற்ற பொத்தல்களே இவர் மக்களோடு ஏழைமகனாக வாழ்கின்ற மதகுரவர் என்பதை எடுத்துரைக்கும்,

மடஆலயத்தில் மாடமாளிகைகளிலும் கம்பீர கட்டடங்களிலும் மட்டும் ஆண்டவன் தொண்டு முற்றுப் பெறுவதில்லை; வீதியோரத்திலே, வேலிக்கரையினிலே, மரநிழல்களிலே, மாடாக உழைக்கும் மனிதப்பிறவியின் சிறு குடிசையிலே, சேரியிலேகூட ஆண்டவன் அடியானுக்கு வேலையுண்டு என்பதை எடுத்துக் காட்டும் ஓர் இனிய துறவிதான் தாவீது என்பதை எவரும் மறுப்பாரிலர்.

கால்நடையாக நடந்து சென்றே, கடவுளுக்கும்: நாட்டுக்கும், மொழிக்கும் அரும் தொண்டாற்றும் இத்துறவி, புரட்சிக் கருத்துக்களாலும், புதுமைக் கொள்கைகளாலுங் கவரப்பட்ட இன்றைய இளைஞர்களின் உள்ளத்தினிற் சாந்தமான புரட்சித் துறவியாக இடம் பெற்றுள்ளார்.

இத்தகைய துறவி இன்று எடுத்துக் கொண்டிருக்கும் பணியானது இவரின் வாழ்நாளிலேயே முற்றுப் பெறுமாயின், அது உலகு வாழ் ஆறுகோடி தமிழ் மக்களுக்கும் பெருமை தரும் நிகழ்ச்சியாக அமையும் எனின் வியப்பன்று. இதற்காக இறைவனை அநுதினமும் இறைஞ்சுவோமாக!

இது தோன்றி 4 நாட்களுள் தாவீதடிகளின் தமிழெனுவ சொற்பிறப்பொப்பியல் இலக்கணவகராதியின் 1-ம் பாகம் தோன்றிற்று. 3-ம் பாகம் தமிழில் 1972 ஆமாண்டில் வெளிவரும். 2-ம், 4-ம் பாகங்கள் 1971, 1972ஆம் ஆண்டுகளில் ஆங்கில, தமிழ், சிங்கள

சமஸ்கிருத எழுத்துக்களில் வரையப்பெற்று வெளியிடப்படும். ஒவ்வொரு பாகமும் 10 ரூபா; ஆனல் நான்கு பாகங்களேயும் ஒருங்கே வாங்கின், 30 ரூபா, இப்பணத்தை 31.12-71க்கு முன் புனித பத்திரிசியார், யாழ் நகரில் வாழுமவர்க்கனுப்பினுல் The Money must be made payable to him in cash at the சுண்டிக்குழி Post Office; if a Cheque, it should be crossed ''and Co'' His address is; Rev. Fr. H. S. David, St. Patrick's College, Jaffna.

# VI "32 மொழிகளில் பாண்டித்தியமுடைய அடிகளார் தம் ஆய்வுகள் மொழிக்கும் தம் தாய்நாடாகிய முழு ஈழத்திற்கும் பெரும் நன்மை பயக்கும் என்கின்றனர்"

ஈழநாடு வாரமலர் ஞாயிற்றுக்கிழமை 19 - 9 - 71

**மொழி ஆய்வின்மூலம் இன ஒற்றுமை காணும் தாவீதடிகள்.**

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணேம்" இது தான் — ஒருமொழி, இருமொழி தெரிந்த நம்மிற் சிலர் எழுத்தில் வடிப்பதும், மேடையில் முழங்குவதுமாகும். ஒரு சில மொழிகளே மட்டும் தெரிந்த அதுவும் பூரணமாகத் தெரியாத, நமக்கு பாரதியின் இந்தக் கூற்றை அர்ப்பணிக்கலாமா? பல்வேறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்று அவற்றை அலசி ஆராய்ந்தவர்கள் பாரதியின் இக்கருத்தைக் கூறும் போதுதான் நாம் உண்மையை சந்தேகமின்றி உணர்ந்து கொள்கிரேம்.

**32 மொழிகளேக் கற்றவர்:**

இவ்வாறு பல்வேறு மொழிகளேக்கற்று அவற்றுள் தமிழின் இனிமையே மேலெனக்கண்ட அறிஞர்கள் சிலர் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கின்றர்கள். இவர்களில் ஒருவர்தான் சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதியை வெளியிட்டுள்ள வண. பிதா. தாவீதடிகள். மிக எளிமையானவர், குழந்தையுள்ளங் கொண்டவர். ஆழ்ந்த அறிவால் ஆழமான ஆற்றின் அமைதி அவர் முகத்தில் குடிகொண்டிருக்கிறது. அன்பே உருவான அடிகள் அன்பும் தனெக்கொருமொழி, எனவேதான் 33 மொழிகளேக் கற்றுள்ளதாகக் கூறுவார்.



"32 மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர் தமிழை ஏன் தேர்ந்தெடுத்தார்? இவரது தமிழ்ப் பணிக்கு ஊக்கம் அளித்தவர்கள் யார்? இவரது அகராதியால் ஏற்படப்போகும் பெரும் நன்மையென்ன? இவரது ஆராய்ச்சிகளால் பயன் என்ன?" என்பன போன்ற பல கேள்விகள், அடிகளேப்பற்றி அறிந்த நாட்தொடக்கம், என் சிந்தனையில் சுழன்று கொண்டிருந்தன.

இக் கேள்விகளுக்கு விடை காணும் அவாவால் உந்தப் பெற்று, சமீபத்தில் தாவீதடிகளே சென்ற் பற்றிக்ஸ் விடுதியில் சந்தித்தேன். சந்தித்த மாத்திரத்தே என் சிந்தனையில் சிதறடித்த கேள்விகளே அவரிடம் கேட்டுவிட்டேன். புன்னகையோடு அமைதியாக, இரத்தினச் சுருக்கமாக, இவற்றுக்குப் பின்வருமாறு பதிலளித்தார் அடிகள்.

**வித்திட்டவர் ஞானப்பிரகாசர்:**

எனது தமிழ்ப்பணிக்கு வித்திட்டவர் நல்லூர் சுவாமி வண. ஞானப்பிரகாசர், இவரால் சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதியில் முதல் ஆறு பாகங்கள் வெளியிடப்பட்டன. இப்பணியைத் தொடரவிழைந்த நான் இலக்கணமொழியியல் ஆராய்ச்சிகளே 9 பாகங்களாக வெளியிட இருக்கிறேன். இவற்றில் 2-ம், 4-ம் 6-ம் 8-ம் பாகங்கள் தமிழில் மட்டுமன்றி, நம் சகோதரர்களான சிங்கள மக்களும் புரியும் வண்ணம் இன்று நம்மிடையே பொது மொழியாக விளங்கும் ஆங்கிலத்திலும் வெளிவருகின்றன. 1-ம், 3-ம், 5-ம் 7-ம் பாகங்கள் தமிழ்மொழியிலேயே வெளிவருகின்றன."

**தனிச்சிங்களத்தில் ஒருபகுதி:**

"இப்பாகங்கள் முறையே தமிழ், சிங்களம் ஆதிய மொழிகளே ஆராய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 9-ம் பாகம் தனிச்சிங்களத்திலேயே எழுதப்படும். இன்னும் 40 வருடங்களுக்குள் அநேக சிங்களவர், நாமே தமிழர் என்பதைத் தெரிந்து. தமிழ் பேசத்தக்கவர் ஆவர் என்பதே என் துணிபு; ஏனெனில் தமிழின்றி சிங்களம் முழுதாக விளங்காதே! இவ்விரு மொழிகளேயும் ஆராய்ந்தால், திராவிட சொற்கள் **இரண்டிலும்** கலந்திருப்பதைக் காணலாம்: சிங்கள மொழியானது சில தருணங்களில், இன்றைய தமிழ் மொழியைவிட, பழைய தமிழாகிய தாமீழத்திற்கு நெருங்கிய தொடர்புடையது. இவ்விரு மொழிக் குடும்பங்களேயும் முழுதும் அறிந்தவர்களாலேயே எப்பதம் ஆரியம், எப்பதம் திராவிடம் எனக் கூறமுடியும்.

1956-ம் ஆண்டில் சிங்களவர் ''அப்பே ஆண்டுவ'' என்று தம் அரசாங்கத்தை அழைத்ததை நோக்கினல், இதில் ''ஆள்'' என்னும் தமிழ்ப்பதம் இருப்பதைக் காணலாம். இது தாமீழமே என்பது வெளிப்படை ஆனதினல் சிங்களவர் திராவிடம் பேசுகின்றனர். இதுபோலவே தமிழில் அரசாங்கம் எனும் பதத்தைப் பார்த்தால் ''அரசு'' எனும் வடமொழிச் சொல் இருப்பதைக் காணலாம். தமிழர் ஆரியம் பேசுகின்றனர்.''

### இன ஒற்றுமைக்கு அடிகோலும்:

''எனது இந்த மொழி ஆய்வால் என்ன நன்மை என்று கேட்டீர்களல்லவா? எனது இந்த ஆய்வு நம் நாட்டில் பெரும் பயனைத் தரப்போகின்றது. பயன் மொழிக்கு மட்டுமன்று, சிங்களத்தமிழ் இனத்துக்கே நல்ல பயன் அளிக்கவிருக்கிறது, எனது ஆய்வு சிங்கள-தமிழ் ஆகிய இரு மொழிகளுக்கும் உள்ள நெருங்கிய உறவை எடுத்துக் காட்டி, இரு இன உறவுக்கு வித்திட்டு தேசீய ஒற்றுமையைக் கொண்டுவரவல்லது.'' இவ்வாறு துணிவோடும், நம்பிக்கையோடும் கூறிய வண. பிதா தாவீதடிகளை நோக்கி, ''பல்வேறு மொழிகளைக் கற்க வேண்டும் என்னும் அவா பிற்காலத்தில் ஏற்பட்டதா? அல்லது, சிறு வயதிலேயே உண்டானதா?'' எனக் கேட்டபோது, அடிகளார் இங்ஙனம் உரைத்தனர்:-

### மொழிகளைக்கற்கும் விருப்பு:

14 வயதுச் சிறுவஞக இருந்தபோதே என் தந்தையினது தூண்டுதலினுலும், உதவியினுலும், நான்கு மொழிகளைக் கற்க ஆரம்பித்தேன். வண. பிதா. ஞானப்பிரகாசர் ஆர்வமூட்டியதினல் என் நாட்டம் மேலும் பல மொழிக்கல்வியில் சென்றது,

1936ம் - 49.ம் ஆண்டுகளில் பாளி - பிராகிருத - சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் பெற்றேன். இந்தியாவில் பம்பாயில் கல்வி பயிலும் போது, யேசு சபையின் திலகமான ஹெராஸ் அடிகளின் தூண்டுதலினுலும் புத்திமதியினுலும் இந்திய சரித்திரத்தில் ஈடுபடுவதற்கும், மொழியில் ஆராய்ச்சியைத்தேடி அதில் பாண்டித்தியம் பெறுவதற்கும் அவரின் தோழமை ஏதுவாயிற்று. அடுத்து பேராசிரியர் தனிநாயகம் அடிகளாகும், நான் லண்டன் செல்வதற்கும், மேலும் இத்துறையில் வளர்ச்சி பெறுவதற்கும் ஊக்கமளித்தார். நான் சரித்திரத்தில் பெற்ற பாண்டித்தியமே சொற்களை ஒழுங்குக் கிரமமாக அமைப்பதில் திறமைபெற உதவியாக உள்ளது.'' எனச் சுருக்கமாகத்தான் கல்வி பெற்றமையை எடுத்துக் கூறினர்.



1936-ம் ஆண்டு ஆங்கில சாம்ராச்சியத்தினல் நடாத்தப்பட்ட ஐரோப்பிய சரித்திரப் பரீட்சையில் முதலிடத்தைப் பெற்றதோடு பொருளாதாரப் பாடத்திலும் தங்கப்பதக்கம் பெற்றவர் இவரே. அடிகள் ஏனைய நூற்றுக்கு மேற்பட்டவர்களை இப்பரீட்சையில் தாண்டினர்,

### அகராதி பற்றி:

வண. பிதா ஞானப்பிரகாசரின் பணியைத் தொடர்ந்து இவர் செய்யினும், அகராதி வெளியிடும் முறையில் அநேக வேறுபாடுகளை நாம் காணக்கூடியதாகவிருக்கிறது. தமிழையும் எழுவத்தையும் ஒருங்கே, இலக்கண அகராதி விதமாகக் கற்பித்தும், சென்னைத் தமிழ் அகராதி, சிங்கள அகராதிகளைத் திருத்தியும், எடுத்தாளப்படும் சொற்களை எந்தெந்த சிங்கள-தமிழ் நூல்களில் தோன்றுவன என்று காட்டியும், வரிசைக்கிரமமாக காலத்தின் மாற்றத்தால் இப்பதங்கள் அடைந்த மாற்றங்களை எண்பித்தும், ஆராய்ச்சி மூலம் காட்டி உள்ளார். அத்துடன் படிப்போர் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் சொற்களுக்கு உதாரணமூலம் விளக்கமும் பெயரும் இட்டுள்ளார். முதலாம் பாகம் ''ல்'' என்பதில் முற்றும் ஓரசைச் சொற்களை ஆராய்வதனல், இதற்கு ''லீலா'' எனும் பெயரே பொருந்தும்.

### நல்வழிகாட்டி:

எந்த ஓர் இனத்தினதும் மொழியும் கலை கலாச்சாரமும் வளர்ந்தால்தான், அந்த இனம் வளரும். மொழிவளர்ச்சிக்கும் மொழி ஆய்வுக்கும் தன்னை அர்ப்பணித்துள்ள வண. தாவீதடிகளாரின் இவ்வரும் பணி நம் இனத்தைக் காக்கவல்லது. நாமும் நம்மொழியும் தற்போதிருக்கும் இக்கட்டான சூழ்நிலையில் அடிகளாரின் தொண்டு நமக்கொரு நல்வழிகாட்டியாக அமைந்துள்ளது.

பேட்டி கண்டவர் நிர்மலா நாதன்,

வண. கலாநிதி தனிநாயகமடிகளின் மருமகள்.

## VII. 'தாமீழமும்' ''தமிழ் - சிங்களமும்.''

### ''தாய்மொழியும் அவளின் இரு சிறந்த புதல்விகளும்.''

ஒரு சீருராய்வு: கலாநிதி தாவீதடிகளார் நடாத்திய போட்டி: இஃதில் பங்குபற்றின நச்சினர்க்கினியர் எழுதுகின்றனர். இவ்விரு மொழிகளுள், அஃதாவது தற்போது வழங்கப்படும் தமிழ் சிங்கள மொழிகளுள், யாது அநேகவநேக விடங்களில்

தாமீழத்துடன் கூடுதலாய அண்மையில் இப்பொழுது இருக்கின்றது? இதை ஆராய இவ்வாண்டின்கண் (1971) தாவீது அடிகளார் கொழும்பு மாநகரில் கூட்டிய பேரவையும், நடாத்திய போட்டியும் ஆயிடைப் பங்குபற்றின ஒருவரால் ஈங்கண் வர்ணிக்கப்படுகின்றது. திருவனந்தை சுந்தரம்பிள்ளை இயற்றிய ''மனோன்மணி'' ன்னும் நாடகத்திலிருந்து எடுத்தாளப்படும் '' பா '' அன்றேல் ''செய்யுள்'' இவ்வரலாற்றுக்குச் சிறப்புப்பாயிரம்போல் அமைவதாக! ''பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்து துடைக்கினும், ஓர் எல்லை அறு பரம்பொருள், முன் இருந்தபடி, இருப்பதுபோல், கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும் உன் உதரத்து உதித்து எழுந்தே, ஒன்றுபல ஆயிடினும் ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா; உன்சீர் இளமைத் திறம் வியந்து, செயல் மறந்து, வாழ்த்துதுமே ! ''

பண்டைய காலத்து மொழியே தாமீழம். இஃது ''கன்னடம், தெலுங்கு, துளு, தமிழ்'' போன்ற 20 மொழிகளின் தாய்; இஃதை ஆரியர் திராவிடமென அழைப்பர். இப்பாவில் வாழ்த்துப்பெற்றது "தாமீழம்.'' 20 திராவிட மொழிகளின் நற்றாயும், சமஸ்கிருதம் - பாளி - பிராகிருதங்கள் ஆகிய ஆரிய மொழிகளின் செவிலித்தாயும் (foster-mother) இத்தாமீழமே. யேசு பெருமானின்தாய் மரியம் மாளை ஒரு நாள் ஒரு பெண்மணி ''இவரைப் போன்ற உந்நத போதகரை ஈன்ற உதரம் பாக்கியம் பெற்றதே'' என இயம்பிய வண்ணம், இப்புலவர் தாமீழத்தின் உதரத்தை இங்ஙனம் போற்றிப் போந்தனர். இதுகாறும் இத்தாய்க்கு 19 புதல்விகள் மட்டுமே இருந்தனர் எனச் சான்றோர் பலர் சாற்றினர். ஆயினும் மொழியியலும் வரலாற்றும் செவ்வெனக் கசடறக் கற்று இருதுறைகளிலும் புதுப் புது உண்மைகளைக் கண்டுபிடித்து, ஒவ்வோராண்டுக்கும் இவற்றின் கண் ஒரு புரட்சியை உண்டாக்கும் கலாநிதி தாவீது அடிகளார் இயம்புவதைக் கேண்மின்:- ?- ''இஃதங்ஙனமன்று, ஒருமுக்கிய புதல்வியை நீயிர் மறந்தது எவன்? தமிழ் - மலையாளத்திற்கும், கன்னடம் - தெலுங்கு - துளுவத்திற்கும் இடையிற் பிறந்த மூன்றும் குமாரத்தியை நீயிர் நோக்காது என்னே? அங்கே பாருமின். ஆரிய மாறு வேடம் அணிந்து, ''பாளி''யை உடுத்து, ''பிராகிருதக்'' கம்பளித் துப்பட்டியால் தன் தலையையும் தன் ஏந்தெழில் முலை ஆகத்தையும் முடிக்கொண்டு நிற்கும் மங்கையாகிய சிங்களம் தாமீழத்தின் மூன்றும் புதல்வி இவளே. தாவீதடிகளின் இக்கூற்றை சில தமிழரும் பெரும்பான்மையான சிங்களவர்களும் ''இஃது பைத்தியமென'' நிராகரித்ததினுல் கொழும்பு நகர் அக்குவினஸ் சர்வகலாசாலை மன்



றத்தில், அண்மையில், ஒரு நாட் காலை 3 மணித்தியாலங்களாக இரு திறத்தார்களுக்கும் ஆங்கில சமஸ்கிருத, பாளி, பிராகிருத சிங்கள, தமிழ் மொழிகளில் ஒரு நீண்ட சொற்பொழிவை இவ்வடிகள் ஆற்றிய பின்றை ஒருபோட்டியும் நடாத்தினர். ''apita demala epaa, '' + (அபி. (ட்) ட தெமள எ (ப்) பா) என இயம்பிய அதே சர்வகலாசாலையின் சிங்கள மொழிப் பேராசிரியர் செனநாயக்காவையும் அவ் வவைக்கு சமூகம் அளித்த பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்களையும் இரு மொழிகளில் போட்டித் தலைவர்களாக தாவீது அடிகள் நியமித்தனர். இக்குழுவுக்குத் தலைவர் ஒரு சிங்களப் புத்த குருக்களாகிய கலாநிதியே. இப்போட்டியை யானுங் கண்டு உரைகளனைத்தையுஞ் செவிமடுத்தேன்: இக்கலாநிதி சில எச்சரிக்கைகளை இனிதே இயம்பினுர். அதில் நடந்தவற்றை அச்சிங்களக் கலாநிதியாகிய குழுத் தலைவரின் சொற்களிலேயே யான் கூறுகின்றேன்; கேண்மின்.

**முதலாவதாக** தமிழ் மக்களே, 20 ஆண்டுகளுக்கு முன் யான் நும் இனிய மொழியைப் படிக்கத் தொடங்கினேன். எம் அதிலுமினிய சிங்களத்தை இன்னும் கூடுதலாக விளங்கிக் கொள்வதற்காகவே இம்முயற்சி பயனற்றதன்று என யான் நம்புகின்றேன் சிங்கள '' '' (ள) எனு மெழுத்தின்கண் ஆரம்பமாகுஞ் சொற்களைச் சிங்கள அசராதிகள் அநேகவற்றின்கண் புரட்டிப்பார்த்தேன்; ஆனல் இவற்றின் தொல்கருத்துக்களோ அவற்றில் தோன்று: இவை அனைத்தும் சுத்த சூனியமாகவே இருந்தன. தமிழகராதிகளைப் படிப்படியாய்ப் பார்த்த பொழுதோ, இச்சிங்களப் பதங்களின் தொற்பொருள் முழுவதும் விளங்கிற்று. ஆனதினுல் தாவீது அடிகளாரின் ''சிங்களம் படிக்க விரும்புபவன் எவனும் முதன் முதல் தமிழ் மொழியைக் கசடறக் கற்றல் வேண்டும்'' என்னும் கூற்று வாய்மை உடைத்தே என யான் நாள்வாயும் கண்டு வந்தேன், நனி உணர்ந்தேன். இங்ஙனமே செப்பினர் அக்கலாநிதிப் புத்த குருக்கள்.

**இரண்டாவதாக:** இரு மொழிகளையும் பேசுவோரே, நீங்களே பாக்கியவான்கள். ஏனெனில் Switzerland Luxemburg அன்றேல் Luxembourg என்னும் நாடுகளில் பல வாரங்களாகத் தங்கினேன்' சென்ற ஆண்டில் அவற்றில் German, French'' எனும் இரு மொழிகளும் ஒருங்கே வழங்கப்படும். அங்ஙனம் அடுத்தடுத்த வசனங்களில் முதல் ஒன்றையும் அடுத்ததில் மற்றதையும் அவர் வழங்குழி, ஒருவனையான் ''நின் சொந்த மொழி என்னே?'' என வினவினேன். அதற்கு அவன் இரண்டும் தான்'' என்றனன். உன்தாய், நீ குழந்தையாய் இருப்புழி, எந்த மொழியில் உன்னுடன் கதைத்தனன்?'' இரண்டிலுந்தான். என் தந்தை சகோதரர் சகோதரிகள்

அனைவரும் உங்ஙனமே! நீயிரும் இலங்கையில் இவ்வண்ணம் நும் இரு மொழிகளையும் வழங்குவதின்றோ'' என வியப்புடன் அந் நாட்டினவன் என்னை வினவினன்.

மூன்றாவதாக:- சிங்கள அன்பர்களே, உண்மையில் எம் மொழி சிங்களமன்று. அஃது ''சீ எளுவம்,'' ''சிர் எளு'' அன்றேல் ''சிறப்பான எளுவமொழி.'' தொற் காலத்தில் ''எழுவம்'' அஃதாவது ஈழத்தின்கண்.'' ''எழின் நாட்டின்கண்'' இலங்கையில் ஒரு மொழி. மட்டுமே வழங்கப்பெற்ற பொழுது, இவ்வெளுவமே யாவரும் இயம்பிய மொழி. இது தாமீழத்திற்கும் மெஸொபொத்தாமியாவின்கண் கி. மு. 3,600ம் ஆண்டு தொடங்கி கி. மு. 1,500ம் ஆண்டு வரை இயம்பப் பெற்ற சுமேரியத்திற்கும் மிக அண்மையான மொழி எனத் தன்னைத் தானே தெளிவாகக் காட்டுகின்றது. யான் அதைத் தடை செய்ய அநேகந் தரம் தெண்டித்தேன். ''சிங்களமே, சீ எளுவமே நினக்குத் தாமீழமோ, தமிழோ, வேண்டா; நீ ஆரியத்துடன் இன் துயில் கொள்க!

அதின் இரு மூலைகள் நாப்பண் தங்குக!'' இங்ஙனம் யான் கூறியும், மாதவி என்பாளின் எழில் நகில்களை நீத்து கண்ணகியின் பால், திரும்பும் கோவலனைக் கடுப்ப, ''சீ எளும் தாமீழத்துடன் தொடர்பு கொள்ளக் கங்கணங்கட்டி நிற்கின்றதே! இப்பொழுது மட்டும் அன்று: ஈராயிரம் ஆண்டுகளாக இங்ஙனம் இயல்கின்றதே; இதற்கு ஒரு பிடிவாத வருத்தம் போலும்! இப்பொழுது மட்டுமாகில் யாம் மிகுவாய் முயன்று எம் உயலா முயற்சியினால் இதைத் தடுப்பதில் சிற்சில வெற்றிகளைப் பெறினும் பெறலாம். என் பெற்றப்பா பிறக்குமுன் இது நடந்திருந்தால் யான் எங்ஙனம் இதைத்தடுதல் இயலும்? என்னையும் மன்னிக்க வேண்டும்; எம்தாய் மொழியையும் மன்னித்தல் சால்புடைத்தே! இங்ஙனம் இவர் இயம்புழி அவர்களிற் சிலர் ''ஒருதாரணம் கூறுமின்'' என இவரை மன்றாடினர். அதற்குக் கலாநிதி இதைக் காட்டினரன்றோ? பரணர் இயற்றிய அகநானூற்றின் 76-ம் செய்யுளின் 11-ம் அடியின் கண்'' சிறைபறைந்து உரை இ''எனுந் தொற்பதங்கள் தோன்றும். இவை இப்போதைய ''தமிழ்'' அல்ல: இவை ''தாமீழம்.'' தமிழ் மொழியின்கண்ணே ''காவிரியாற்றின் கரையினை மோதிப்பரவி'', என் இவற்றை மொழிபெயர்க்கலாம். நுமக்குத் தமிழ் மட்டுமே விருப்பமன்று: ''தாமீழத்துடன் நுமக்கு யாதுங் கோபம் இன்று என எமக்குத் தெரியும்.

அங்ஙனம் அன்றோ?'' என அவர்களை வினவினர். இதற்கு அவர்கள் புன்னகையுடன் கூறியதாவது: அன்பார்ந்த ஆசிரியரே, புத்த குருக்களே, தாமீழத்தின் பெயரை இன்றுதான் முதற் கேட்டனம் யாம். அங்ஙனம் இஃதிருப்ப, அத்துடன் யாம் சினம் கொள்வது



எங்ஙனம்? இதற்குள் அவைத்தலைவர் சில தமிழர் மறு பக்கத்தில் வீற்றிருப்பதைக் கவனித்து, ''சிங்களவரே, தமிழரே, வாரீர். சிறு போட்டி வைப்போம்; ஈற்றில் பரிசும் அளிப்போம். நும் இரு மொழிகள் நடுவண்யாதில் இம் மூன்று பதங்களும் இருக்கின்றன? அதுவே போட்டியாகும் என இனிதே வினவினர் புத்த குருக்கள் ஆகிய தலைவர். உடனே பேராசிரியர் சேனநாயக்காவும் பண்டிதர் கிருஷ்ணபிள்ளையும் முன் வந்தனர் இப்போட்டியிற் பங்குபற்ற.

'முதலாவதாக, பண்டிதர் கிருஷ்ணபிள்ளை ''தாமீழத்தின்கண்'' ''பறை'' என்பது மோதுதல்தான், ஆனால் தாவீது அடிகளாரின் ''லீலா காதையின்'' ivஆம் பக்கத்தின்படி இப்பதம் 9 மடி ஆகு பெயராகத் திரிபு பெற்று, தமிழில் மோதப்படும் இசைக் கருவியைக் குறிக்க வல்லதாயிற்று. தாமீழத்தின் இறுதி நாட்களிற்றானே, கிறீஸ்து பெருமான் இவ்வுலகத்தில் அவதரித்த நாட்களிற்றானே, அகநானூற்றின் 15:4இல் ''பறைக்கண் பீலி'' என வருதலை நோக்குமின்: ''பறைபோல வட்டமான கண்கள்,'' இங்ஙனம் தாமீழத்தின் இறுதிநாட்களிற் றோன்றிய அகநானூற்றின்கண் 13 இடங்களில் இப் ''பறை'' இக்கருத்திற் றோன்றிற்று. அப்பொழுது தலைவர் தமிழ் மொழிக்கு 33 புள்ளிகள் அளிக்கலாம் எனச் சாற்றினர்.

இரண்டாவது - பேராசிரியர் சேனநாயக்கா:- தமிழுக்கன்று. தெலுங்கு கன்னடத்திற்கே சிங்களம் அண்மையானது ஆனதினால்: தமிழ் -மலையாள க, த, ப என்பன இம்மூன்று மொழிகளிலும் முறையே ''ga, da, ba'' என மாறிவரும் உதாரணமாக, தமிழ் - மலையாளத்தில் ''கல்'' சிங்களத்தில் ''gal'' உதாரணம் ''gal ohya'' எனவும், ''தமிழ்'' என்பது சிங்கள மொழியின்கண் ''demala'' எனவுந் திரிபு பெறுவதை நாள் வாயுங் காண்கின்றனமன்றோ! ''க் ச் த் ப் ற் ட்'' என்பன ''Suro'' என முற்காலத்தில் அழைக்கப்பெற்றன. g j d b d d என்பனவே இவற்றுக்குப் பொருந்திய முறையான ''சொனந்த'' (Sonant) என அழைக்கப்படும் ''Surd ஆகிய ''ப்'' எனுந் தமிழெழுத்து சிங்களத்தில் ''Sonant'' ஆகவரும்: ''b'' ஆனதினால் ''பறை''யின் திரிபு ''bera''' என்பதே. மேலும் தமிழில் வரும் ''அ'' என்னும் உயிரெழுத்து அநேகந்தரங்களில் சிங்களத்தில் ''எ, e, என, உச்சாரணப் பிழையின் நிமித்தம், மாறுவதும் உண்டு. நீங்கள் ''தமிழ்' என அழைப்பதை யாம் demala என அழைக்கின்றோம்; இங்ஙனம் இயம்பினர் பேராசிரியர் சேனநாயக்கா. அப்போது சங்கத்தலைவர் ''சீ எளுவத்திற்கும்'' 33 புள்ளிகளைக் கொடுத்தனர். ''சீ எளுவம்,'' ''சிங்களம்'' என்பன ஒன்றே!

### 3. மூன்ருவது, பண்டிதர் கிருஷ்ணபிள்ளை:-

இப்பொழுது ''சிறை'' என்ற முதலாம் பதத்தை ஆராய்வோம். முதன் முதல் சென்னை அகராதியைப் பாருமின் அஃது இதை இங்ஙனம் விளக்கிற்று: கரை, அணை. மதில், வரம்பு, காவல், சிறைச்சாலை, அடிமைத்தனம்,. கங்கு கரை. சங்கு கரையே இச்செய்யுளில் சிறையென்பதின் பொருள். பரவி அகன்றுபோக விரும்பும் ஆள் - விலங்கு - பொருளைச் சிறுதாக்கிக் கட்டுப்படுத்துவதே ''சிறை''யென்பதின் அடிப்படைக்கருத்து.

### 4. பேராசிரியர் சேனநாய(க்)கா:-

இப்பதம் இதே பொருளிலேயே எம் இனிய சிங்களத்திலும் தோன்றும். அதுவும் பற்பலவிதமாக:- (a) கார்ட்டெர்: சிங்கள-ஆங்கில அகராதி. பக்கம் 233 ஆவதில். சிருரோதய. Ciraaroodhaya (Ciraa-roodhaya)=Blockade தடுத்தல். சிறை' சிறைப்படுத்தும் பொருள். இதுவே இத்தாமீழச் செய்யுளின் பொருளுமாகும். b) ''Caesar'' என்பதை இப்பொழுது ஆங்கிலம் ''ஸீஸர்'' என உச்சரிக்கும். அதேபோல் சிங்களத்திலும் cl (சி. si (ஸி) எனத் திரிபு பெறும். ஆகவே, அதே அகராதியின்கண், 682 ஆம் பக்கத்தின்கண், (ஸிற), slra = Confinement = மறியல்; sirageya = Prison, Jail = மறியற்கூடம்; ஸிறகரனவா (Sirakaranavaa = சிறைப்படுத்து; imprison; ஸிறகாரயா (Sirakaarayaa) Prisoner, Captive. கைதி: (c) தாமீழ ''ச்'' ஆரியர்களின் காதுக்கு ''ch'' எனத் தொனித்ததால், ''சிற'' என்பதை ஆரியம் 'Chira'' என உபயோகித்தது, பல்லாண்டுகளாக மனிதனின் இயற்கை சோம்புவது. இச்சோம்பலினுல் ''ch'' என்பது காலகெதியில் ''h' என மாறிற்று உதாரணமாக ''செட்டி'' (தமிழில்), ''ஹெட்டி'' எனச் சிங்களத்தில் வரும். அதேபோல் ''chira'' ''hira'' எனப் பிற்காலத்தில் உச்சரிக்கப்பட்டதை இப்பொழுது நனி நோக்குமின்:- அதே அகராதியின் 724 ஆம் பக்கத்தின்கண், ஹிற, ஹிறய (hira, hiraya) ஆதியில் அடிமையாள், பெண்டாகச் சிறை பிடிக்கப்பட்ட இளம் பெண், ஒப்பிடுக. சென்னைத்தமிழகராதி, பக். 1465, ''சிறை1'', 6-ம் பொருள்: ஆங்கிலத்தில், ''young woman taken Captive to marry or to keep'' 7 ம்பொருள், beautiful young woman worth taking captive, சிறை கொள்ளத்தக்கவள். இவ்விரு பொருள்களும் ஏந்தெளின் மிக்கச் சிங்கள இளம்மனைவிகளுக்குப் பொருந்தும் ஆனதினுல் அவர்களை ஆண்கள் ''ஹிற, ஹிறய'' என அழைத்ததில் வியப்பின்றே! தமிழ் ஆடவர்களும் தம் மனைவிகளை வரைதல் செய்கின்றனர் அன்ருே? ஒப்பிடுக: தொல். பொருள். 140, ''வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று ஆயிரண்டு என்ப வரை



தும்பளை புனித மரியா

தல் ஆறே.'' ஆனுல் வரைதலின் முதற்கருத்து அடக்குதல் அன்ருே? ஒப்பிடுக: தேவா. 631.4, ''வரைகிலேன் புலன்கள் ஐந்தும்.'' இப்பொழுதோ அநேகம் குடும்பங்களின் பெண்டிரே தம் கொழுநரை வரைந்து, அடக்கி, சிறைப்படுத்துகின்றனர் 'Otempora,! Omores,'' மேலும், அவ் வகராதியின் அதே பக்கத்தில், - ஹிற, ஹிறவு light. Confined, Fixed. தமிழெழுத்தில் ''சிற்+அ, சிற்+அவு'' என்பனவே: தாமீழத்தில் ''சிற்+ஆ'', ''சிற்+அவு.'' எம் அகநானூற்றின் சிறப்பகராதியில் 60 பதங்கள் இங்ஙனமே தொல் இலக்கியங்களில் ''ஆ'' ஆகவும், மறுமுறை ''அவு' ஆகவும் தோன்றுவதைக் காட்டியுள்ளேன். உதாரணம் ''இரா, இரவு;'' ''புரு, புறவு.'' ''நிலா, நிலவு.'' ஆனதினுல் சிங்களம் ''சிற்'' எனும் தாதைமட்டுமன்று, ஆனுல் தாமீழத் தொல்விகுதிகளையும் இதுகாறும் பேணி, பொலம் பூண்போல் பாதுகாத்து வரும்பொழுது, அதை ''ஒரு திருத்தமற்ற ஆரிய, மிலேச்ச மொழி'' என யாம் நிந்திக்கலாமா? இதன்பின் இன்னும் 16 ஹிற (hira, ஹிற) எனும், பதத்தில் தொடங்கும் சொற்களை இவ் வகராதி எமக்கு அளிக்கின்றதே: இவை அனையவும் தமிழ்ச் ''சிறை'யுடன் முழுவதும் பொருந்துவன ஆகினவை. இவ் விருவர் கூற்றுக்களைச் செவிமடுத்த குழுத் தலைவர் இன்னும் 34 புள்ளிகளை இரு மொழிகளுக்கும் அளித்தனர். இப்போது ஒவ்வொன்றுக்கும் 67 புள்ளிகள் வழங்கப்பெற்றன: 'உரை இ'', என்பதைக் குறித்தே இருமொழிகள் நடுவண் இனி போட்டி நடக்கப்போகின்றது.

### 5. பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்கள்:

சென்னைத் தமிழகராதியின்கண் 451 ம் பக்கத்தில் ''உரை'' எனும் வினைக்குக் கொடுக்கப்பெற்ற கருத்துகள் இவையே: தேய்தல், வீணுதல் தேய்த்தல்! பூத்தல் மெருகிடுதல்] சொல்லுதல், ஒலித்தல்.'' ஆதலினுல் ''பரவுதல்' என்ற அகநானூற்றுக் காலத்தக் கருத்தில் இப்பதம் இப்போதைய தமிழில் தோன்றுவதன்று: இஃது மிகவும் இரங்கத்தக்க தொன்ருயிற்றே!

### 6 பேராசிரியர் சேனநாய(க்)கா, புன்னகையுடன் இயம்பியதாவது.

எம் தொல் எளுவமொழியாகிய சிங்களத்திற்கே வெற்றி! அதைப்பற்றிச் சற்றேனும் ஐயம் இல்லை. இஃதை நோக்குமின். மாந்தரின் மிகப் பரந்த உடற்பாகமானது மார்பு அன்ருே! தன் தாயாகிய தாமீழத்தைப் பின்பற்றி, இஃதைச் சிங்களம் இங்ஙனம் அழைக்கின்றதே: uraya = Bosom தமிழெழுத்தில் ''உரய''=மார்பு. உரஸ்தலய=Urasthalaya=The breast Chest=மார்பு. urarl-krita Expanded, பரவின urariya = Expansion, பரத்தல். uru = Expansive, Broadased. Large>Great இவை அனைத்தும் மேற்கூறிய சிங்கள அகராதியின் 127ஆம் பக்கத்தில் தோன்றுவன. மேலும், அதின் 130ஆம் பக்கத்தின்கண் (ஊரு, Uuru)=Big. Large; ஆதியில் Broad Based, Expanded, Expansive''.

பசுவர்க்கத்தின்கண், ஆநிரையினில் இவற்றின் ஆண்மிருகங்கள் உயர்ந்து ஓங்கி நடப்பதனுல், இவற்றை "மாடு" (=பெரிய) எனத் தமிழ் மக்கள் அழைக்கும் வண்ணம். காட்டுப்பன்றிகள் நடுவண் மிகக் கொழுத்த, பருமனுகிய உடல்களையுடைய அவற்றின் ஆண்களைச் சிங்களவர் (ஊரா, Uuraa)[=Wildboar, hog] என அழைத்ததில் வியப்பன்று. மேலும், மாணுக்கரை அடித்துத் திருத்த விரும்பிய ஆசிரியர் அவர்களின் மிகப் **பரந்த** உடற் பகுதியிலே அடித்தலைக் கடவுளும் மாந்தரும் கற்பிக்கின்றனர். இதைச் செந்தமிழ் **அல்குல்** என அழைக்கும், உடல் அதின் மூலம் **அல்கு** (=தங்கு) **வதனுலெ**ன்க. "பர" என்பதற்குச் சிங்களச்சொல்ஊரு, ஆனதினுல் 'ஊருவ' என இம் முக்கிய உறுப்பினை சிங்களம் கூப்பிடும் ஆனதின் நிமித்தம் அந்த அகராதியின் இப்பக்கத்திலுள்ள (130) பதங்களின் பெரும்பான்மை ஆரியம் அன்று, தாமீழமே எனப் பக்கத்தில் நடப்பவனே காணலாமன்றே!

**போட்டியின் முடிவு:**

இத்துடன் எய்தியது. புத்த குருக்களான அக்குழூஉத்தலைவர் "சிங்கள மொழிக்கே வேற்றி! அதறகே நூறுபுள்ளிகளை அளிக்கின்றனம்" எனச் சாற்றி, பேராசிரியர் சேனநாய(க்)காவிற்கு தங்கப் பதக்கமொன்றை நல்கி, அதை இவரின் மார்பின்கண் அணிவித்தனர். அப்பொழுது அக்குழுவிற் பங்குபற்றின அனைவரும் மிக மகிழ்வுடன் தம் கைகளைத் தட்டி, பின்வருமாறு உயர்ந்த குரலில் ஆர்ப்பரித்தனர்;- "சீ எளுவமொழி ஆகிய சிங்களம் தமிழின் தங்கை மட்டுமன்று! அநேக இடங்களில் தமிழிலும் பார்க்கத் தன் தாயான தாமீழத்திற்குக் **கூடிய அண்மையி**ல் வாழ்ந்து, இப்பொழுதும், அங்ஙனமே வழங்கப் பெறுகின்றதே. ஐயோ! பாவம்! அநேக சிங்கள மக்கள் இதை உணராமல், தம் இனிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையே வீண் விரோதத்தை உண்டாக்குகின்றனரே!, இஃது இரங்கத்தக்க தொன்றன்றோ? ஏனெனில் சிங்களம், அடிக்கடி, தமிழிலும் பார்க்கக்கூடிய தாமீழமே! "(தாவீதின் கூற்று.)"

## VIII. வண. கலாநிதி தாவீதடிகளார்க்குச்

### சென்ற பல நாடுகளனைத்தின்கண் மட்டுமன்று, ஆங்கண் கலாநிதியாய்ச் செல்லும் முன்பே பரதநாட்டினிலே தானும் சிறப்பெய்தியது.

திரு, வித்துவான். ஆர். எல். ஆரோக்கியம்பிள்ளை. தூத்துக்குடி, தென் இந்தியா இவருக்கு 30-4-71இல் எழுதிய திருமுகத்தைப் படியுமின்.



ஆசிரியர் அவர்களுக்கு,

மொழியாராய்ச்சித் துறையில் மேரு மலை போல் விளங்கிய சுவாமி ஞானப்பிரகாசரின் சீடராகிய தாங்கள் அவர்கள் விட்டுச் சென்ற அகராதியைச் சுருக்கமாகப் புதிய முறையில் வெளியிட முன்வந்திருப்பது கண்டு பெரிதும் மகிழ்கின்றேன். தமிழுலகமும், மொழியாராய்ச்சி உலகமும் தங்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது.

சுவாமி ஞானப்பிரகாசரின் ஆராய்ச்சி முடிவுகள், அவர்களைப் போல் பன்மொழிப் புலமையும், சொற்களை ஒப்புநோக்கி மகிழும் திறனும், மொழியாராய்ச்சியில் ஊக்கமும், நடுநிலைமை வாய்ந்த உள்ளமும் உடையவர்க்கே புலனுகும் என்பது சுவாமி அவர்களின் அருகில் அமர்ந்து பணியாற்றிய தங்களுக்கும் தங்களைப் போன்றவர்க்குமே விளங்கும் உண்மை. ஏனெனில் சுவாமி அவர்கள், தாங்கள் கூறியவாறு, அரிமா நோக்கம், தவளைப் பாய்ந்து, பருந்தின் வீழ்வு, என்னும் சூத்திர நிரைகளைத் தம் அகராதியிலும் கையாண்டுள்ளார் என்ற உண்மை யாவர்க்கும் தெரிந்த ஒன்றேயாம்.

மொழியாராய்ச்சிக்குச் சுவாமியவர்கள் வகுத்த எட்டுக் கட்டளைகளுடன் 2, 5, 7ஆம் கட்டளைகளுக்கு மேலைத்தேச மொழியியல் வல்லுநர் எழுப்பும் தடைகளைக் குறைத்தும், விதிவிலக்குகளை ஏற்றும், சுவாமியவர்களின் பணியை உலக மொழியியல் வல்லுநர் முன் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எளிய உரைநடை வடிவிலும் அமைத்துத் தருகின்றமை ஒன்றே தங்கள் அரிய நற்பண்புகளையும் மொழிப்புலமைகளையும் காட்டப் போதுமானதாகும்,

முப்பத்திரண்டு மொழிகளில் திறமான புலமை பெற்றுள்ள தாங்கள் மூலச்சொல்லைத் துருவி ஆராய்ந்து, அதனின்று இணைத்த சொற்களையும் கண்டு கூறும் இவ்வரிய பணியால் "உலகில் ஆதியில் நிலவிய மொழி ஒன்றே; உலகில் வழங்கும் மொழிகளெல்லாம் அதன் குடும்பமே." என்னும் உண்மை உலகில் பரவும் அந்நாளில், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் கோட்பாட்டுக்கு இணங்க ஒரே வரலாருக அல்லது காதையாக விளங்கும் ஆதியாகமத்தின் பொருளும விளங்கும் என்றே கருதுகின்றேன்.

அந்நாள் விரைவில் வர இறைவன், தாங்கள் தொடங்கிய பணியை இனிது நிறைவேற்றுதற்குரிய எல்லா நலன்களையும், துணையையும் அருளுமாறு வேண்டுகின்றேன்.

**வித்துவான். ஆர். எல். ஆரோக்கியம்பிள்ளை.**

# IX கலாநிதி ஹ. சி. தாவீதடிகளாரின் ' புல்,'' "வல்,'' "வால்", நிதி போன்ற "லீலாகாதை'' யின் பதங்களின் ஒன்றாகிய "புல்'' ஈங்கு சுருக்கமாக ஆராயப்படுகின்றது:-

''புல் என்ற ஒரு சொல் ஒரு சிறுராய்வு.'' இஃது விரிவாக லீலா காதையின்'' 68-ம்—76-ம் (8) பக்கங்களை நிரப்புகின்றது.

''புல்'' என்னுஞ் சொல் சாதாரணமாக ஒருவகைப் பூண்டுகளையும், அதன் இனத்தையுமே குறிக்கின்றது. கால்நடைகளுக்கு உணவாகும் செடிகளையும் அதன் இன வகைகளையும் குறிக்கும் இந்தப் ''புல்' என்னும் சொல்லில் ஆழமான கருத்துக்களும் உள.

ஆழமாகவும் நுணுக்கமாகவும் நோக்குமிடத்து ''அற்பமான'' அல்லது 'இழிவான'' என்ற பொருளைத் தருகிறது, சென்னைத்தமிழ் அகராதியில் இந்தப் ''புல்'' என்னும் சொல்லு ''திரணசாதி-பனை-தென்னை-தாவரவர்க்கம் - பூடுவகை - புதர்-புல்லரிசி'' என்னும் செடி வகைகளைக் கருத்தாகக் கொள்ளும். ஆசிரியன் பின்னர், ''அற்பமான, இழிவான. **புதுமையான**'' என்றும் பொருள் கொள்கிறான். பிந்திய அர்த்தத்திலிருந்து பூன் என்ற சொல் தருவிக்கப்படுகிறது. பூன் என்பது ''செழிப்பற்ற - தரிசான - வரண்ட - ஏழ்மையான'' என்று பொருள் தருகிறது. முதலில் தரப்பட்ட தாவரவர்க்கம் ''புல் - பூண்டு'' என்ற அர்த்தத்தோடு ஒட்ட, ''புல்'' என்ற மூலச் சொல்லிலிருந்து ''**புலம்**'' என்ற சொல் தருவிக்கப்படுகிறது. ' புல் தரை - வயல் நிலம்'' என்பது இதன் பொருளாகும். அகநானூற்றில் ''புல்தரை'' என்பதற்கு ' புலம்'' என்ற சொல்லே 29 தடவை பயன்படுத்தப் பட்டுள்ளது, இதே அர்த்தத்தில் ''**புலன்**'' என்ற சொல்லும் அகநானூற்றில் இடையிடை இடம்பெற்றிருக்கிறது.

நெய்தல் நிலத்திலே கடலை அடுத்து வயல் அல்லது புற்றரை இருப்பின், அப்பகுதியைப் ''**புலம்பு**'' என்றும், அந்நிலத்தின் தலைவனைப் ''**புலம்பன்**' என்றும் அகநானூற்றின் புலவரநேகர் அழைப்பதைப் பன்முறை நோக்குமின்.

''புல்'' என்ற சொல்லின் நேரடியான அர்த்தத்தோடு இணைந்து ''**புலம்**'' என்ற சொல் வருகிறது; இதற்கு மேலெழுந்த வாரியாக நாட்டின் திறந்த நிலப்பரப்பு என்று பொருள் படும் என முன்னமே இயம்பினமன்றோ? இப்போது இச்சடப் பொருளிலிருந்து ஞானப் பொருள்கள் வரக்காண்மின்!



மனித அறிவானது கிணற்றுத் தவளையைப் போலல்லாமல் தனது குறுகிய வட்டத்தையும் இருளையும் விட்டுப் பிரிந்து பரந்த அறிவுலகின் ஒளிமயத்திற்குள் பிரவேசிக்கும் போதுள்ள நிலையே ''**புலப்பாடு**'' என்று கூறப்படுகிறது. தெளிவாகத் தெரிவதையும் அப்பட்டமாக அறிவதையும் இந்த நிலை உணர்த்துகின்றது. ஆங்கிலத்திலுள்ள plain என்ற சொல்லுக்கு திறந்த வெளி நிலம் என்ற பொருள். ஆசிரியர் மாணவர்களிடம் தெளிவாகத் தெரிந்து கொண்டார்களா? என்பதனை ''is that plain to you'' என்று கேட்கிறார், அவர் கேட்டதன் அர்த்தம் ''Has that been clearly grasped?'' இந்திரிய உணர்வுகளல்லாமல் வேறு எதனாலேயும் மனித அறிவானது உலக நடப்புக்களைத் தெரிந்து கொள்ள இயலாது என்பதனை இலத்தீன் பழமொழி கூறுகின்றது. அதிலிருந்து ''**புலம்**'' என்பது sensation ''இந்திரிய உணர்வு'' என்ற கருத்தைத் தருகிறது. ''அடல் வேண்டும் ஐந்தின் புலத்தை'' என்ற திருக்குறளில் புலம் என்ற சொல் மேற்கூறிய கருத்தினையே புலப்படுத்துகின்றது. மேலும்' நுண்மாணுழை புலம்' என்று கூறும் திருக்குறளின் கருத்திற்கிணைய 'புலம்' என்பது '**நுண்மையான அறிவுத்திறன்**' என்ற ஆழ்ந்த கருத்தினைத் தருகின்றது: deep, subtle, intellectual perecption.

'புலம்பு' என்ற சொல் நெய்தல் வயல் என்பதனைக் குறிக்கின்றது. அடுத்து 'புலம்பு' என்பது '**தனிமை**' - 'வெறுப்பு' - 'கவலை' என்பதனைக் குறிக்கும் சொல்லாகவும் விளங்குகின்றது. துயரத்தினால் தாக்குண்ட ஒருவன் இதயத்தைப் பிளக்கும் தன் துயரினைத் தீர்ப்பதற்கு வழிகாட்டியதற்காகவே மனித சஞ்சாரமற்ற திறந்த வயல்வெளியேயுள்ள தனிமையான இடம் ஒன்றைத் தேடி ஓடுகிறான். இதனை மனோதத்துவ இயல்பென்றே கொள்ளவேண்டும். 'புலம்பு' என்பது '**அழுதல்** துயருறுதல்' என்றும் கருத்துப் பெறுகின்றது, ஆனால் பின்னிட்ட் காலங்களில் என்க.

மனிதர்கள் விட்டுப் போந்த இல்லங்கள், கணவன் பிரிவின்பின் உள்ள மனைவியின் இருதயம், பறவைகள் இல்லாதபோது உள்ள மரக் கிளைகள், கடல், மரங்கள், உயர்ந்த மலைக்குன்றுகள், இரும்பினாலாய ஒரு ஆயுதத்தின் வளைந்த தலைப் பகுதி ஆதியானவைகள் '**புலம்பு**' என்ற சொல்லாகப் பெரும்பாணாற்றுப் படையில் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அகநானூற்றில் '**புலம்பு**' என்ற சொல் பெயராக **தனிமை** என்ற கருத்துடன் 25 தடவைகளும், 'வருந்துதல்' 'கவலையுறுதல்' என்ற கருத்துடன் 4 தடவையும்' இடம்பெற்றுள்ளன.

வினையாக **'தனித்தல்'** என்னும் பொருள்பட 16 தடவைகளும், 'நிர்க்கதி நிலை' என்னும் பொருள்பட 5 தடவைகளும் இடம்பெறுகின்றன. இந்த 9 சந்தர்ப்பங்களிலும் வருந்துதல் அல்லது நிர்க்கதியாதல் என்பன **'தனிமை'** என்ற பின்னணியிலேயே விளைந்து வந்தது தெளிவாகின்றது. நூறில் 82 வீதம் 'தனிமையையே'' **புலம்பு** என்னும் பதம் பண்டைய இலக்கியங்களிற் குறிப்பதை நோக்குக.

எனவே தனிமை - துயர் - **வெறுப்பு** ஆகிய மூன்றும் ஒன்றுகின்றன. **வெறுப்பு** என்பது 'புலவி' என்ற பெயர்ச் சொல்லாகவும், **'புலவு'** என்ற வினைச்சொல்லாகவும் புறநானூற்றில் எடுத்தாளப்படுகின்றது: 'புலவு-தீ மாதோ நீயே.' பொருநராற்றுப்படையில் **'புல'** என்று வினைச்சொல்லாகப் பாவிக்கப்பட்டது; **'பல புலந்து'** 'புலத்தலும். புலந்து' என்றும் தொல்காப்பியம்-பொருளதிகாரத்திலும் வருகின்றது.' **புலம்'** என்ற சொல்லொடு இணைந்தது **'புல'** என்ற சொல்: 'அறிவுறுத்தல். தெரியத்தருதல்' என்று பொருள்படுகின்றது.

எனவே இதிலிருந்து நுண்ணிய அறிவுடையோர்களை, கல்வியறிவு நிறையப் பெற்றோரைக் குறிப்பதற்கு 'புலவர், புலமையோர்' என்ற பெயர்ச் சொற்கள் பெறப்பட்டன. 'என்மனார் **புலவர்'** என்று இதின் முதற் பகுதியில் 19 தடவைகள் (தொல்காப்பியத்தில்) வருவதை நோக்குக. பொருளதிகாரம் எழுத்ததிகாரம் என்பனவற்றில் **'புலமையோர்'** பல இடங்களிலும் எடுத்தாளப்பட்டுள்ளது,

'வெறுப்பு, ஊடல்' என்பதனைக் குறிக்கும், **'புலவி'** என்னும் சொல் 'புல்' என்பதிலிருந்து பெறப்படுகின்றது. 'புலவி' என்னும் சொல் 'வெறுப்பு - ஊடல்'' என்ற பொருளில் தொல்காப்பியம் குறுந்தொகை - அகநாநூறு, பரிபாடல், திருக்குறள் - இவற்றில் அதிகம் இடம் பெற்றுள்ளது. குறுந்தொகையின் 41:5இல் 'புலம்பில் போல, புல் என்று;' **புலக்கம்** (164:5)=(வெறுப்பு நிலை); 177:6 'புலப்பினும்'; 'புலந்து' என்று செ.334: 3ம், அடியிலும் 'புலந்தார்' (=வெறுத்தார்) என்று திருக்குறளிலும், 'புலந்து' என்று நாலடியிலும் இதே கருத்தில் வருகின்றது. இவற்றிலிருக்குஞ் சந்தர்ப்பத்தை நோக்குமிடத்து இவை 'புல' என்னும் மூலச் சொல்லின் கருத்தோடேயே இசைகின்றன என்பது தோன்றுகிறது, 'புல' என்பதற்கு ஒருவருடைய தொடர்பி லிருந்து பிரிந்து செல்லுதல்? குறிப்பாக பிறபெண்களிடம் சென்றநேர்மையற்ற கணவன் வீடு திரும்பிய-உடனும் மனைவி அவனைப்பிரிந்து செல்லுதல்; துயரம், வெறுப்பு, விரக்தி ஆகியவற்றிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள வேண்டி வயல் அல்லது புல்



வெளி (புலம்) இவற்றை நாடிச் செல்லுதல். ஈங்கு வயல் என்ற பருப்பொருளியல்பான 'புலம்' என்ற சொல்லுக்கும் 'புலவி, புலம்பு, **புலம்பல்'** என்ற பண்பியலான அல்லது புலன் கடந்த நாற்பொருளமைந்த உள்ளத்து உணர்வுகளைக் குறிக்கும் சொற்களுக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பினைக் காணலாம். அத்தோடு இத்தகைய சொற்கள் அனைத்தும் புல், அல்லது, புல்வகை, காற்றில் அசைந்தாடுகின்ற புல்வெளி வயல் - என்ற மூலச்சொல்லிலிருந்து பெறப்பட்டவை என்பதனை ஒருவர் மறந்து விட முடியாது, **From the concrete to the abstracts, from the physical to the mental''.**

**'Meadow'** (புல் வெளி) என்ற ஆங்கிலச் சொல்லினை எடுத்துக் கொண்டால், **'madoew'** என்பது கவிதைகளாலும், **'meadow'** என்பது கட்டுரைகளிலும் இடம் பெறுவதையும் காண்கிறோம். ஈங்கு **'our'** சொல்லுக்குரிய மூலச் சொல்லின் ஆதாரம் காட்டப்படவில்லை. **'au'** என்ற ஜெர்மன் சொல்லின் சிதைவு இது [தமிழில் சிதைவு என்று குறிப்பிடப்படுகின்றது. ஆங்கிலத்தில் **'change'** எனக் கொள்ளலாம்.] இது ஜெர்மன் மொழியில் **'வயல்'** என்ற கருத்தைத் தருகின்றது. ஆங்கிலமொழியின் தாய் இலத்தீன் என்பது போல, தந்தை ஜெர்மனும். எனவே ஜெர்மன் சொல்லான **'au'** என்ற சொல் ஆங்கிலத்தில் **'ow** என்று பெறப்படுவதில் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஆனால் **mead**=வயல், au=வயல் என்று ஒரு கருத்துக்கு இரட்டிப்புச் சொற்கள் இடம் பெறுவதேன்? ஆனதினால் **'meadaw** 'என்புழி, 'வயல் - வயல்'' என்றே இயம்புகின்றனமன்றோ?

இது பல்மொழிகளிலும் திட்டமான கொள்கையாக இல்லாவிடினும், சமஸ்கிருதத்தில் 1. 'சந்திர, சந்திரன். 2 'மஸ்' — சந்திரன், 3 'சந்திரமஸ்' சந்திரன் என்று இடம் பெறுகிறது. ஆனால் உண்மையில் 'சந்திர" — **Latin ''candes-idus'' — shining; Skcand-eo 'Mas — 'maa'' meter'' mdasure of the moon; its sixteen digits or** கலைகள்.

மேலும், 'புல்' என்ற சொல்லாராய்ச்சிக்கு வருவோம் திரும்பவும் 'இருளிலிருந்து நம்மை வெளிச்சத்திற்குக் கொண்டுவாரும்' என்று அடையாற்றிலுள்ள பிரம்மஞான சபைச் சுவரில் உபநிஷத்திலிருந்து ஒரு பகுதி பெர்றிக்கப்பட்டுள்ளது. சீவக சிந்தாமணியில் ஒத்த கருத்துடன் **'புலர்ந்தது** பொழுது'' என்று வருகிறது. வருகை தரப் போகின்ற வெளிச்சத்திற்காக இருள் விலகுகின்றது. அதாவது இருளைக் கிழித்துக் கொண்டு சூரியன் தன் பொற்கிரணங்களைப் பரப்பி வெளி வருகின்றான்'என்று வருவது இயற்கை உலகோடு இணைவது. சீவகனின் மனைவிமாரில் ஒருவரான பதுமையின் உள்ளத்து உணர்ச்

சியைத் தெளிவாகக் குறிப்பிடும் இதன் பின்வரும் அடியும், 'நல்லாள் நெஞ்சமும் புலர்ந்தது' என்ற சொற்களும் நன்னெறி உலகோடு இயைந்தனவே.

ஈங்கு 'புல' என்ற மூலச்சொல்லோடு 'ர்' என்ற மெய்யெழுத்து சேர்க்கப்படுகின்றது. இந்த 'ர்' என்னும் சொல் வியஞ்சனம் என்ற தமிழிலும் சமஸ்கிருதத்திலும் கூறப்படுகின்றது. சொற்பண்பினைச் சிறப்பாச் சிறப்பிக்க இது உதவுகின்றது. 'புலர்' 'புலரி' என்று 'இ' அடைசேரும் போதும் கருத்து வேறுபாடின்றி **'புலர்வது'** என்ற பொருளோடேயே வருகின்றது. இதனால் இதுவே ஏனைய சொற்களின் மூலச் சொல் என்பது உறுதியாகின்றது. 'புல்+ஆவு' ▷ **புலவு**= விடிதல்=புலர்தல், 'பொழுது புலரப் போகின்றது' - என்ற கருத்தில் இடம் பெறுகின்றது.

'அ' என்ற குறிலோடு இயைபுடைய சொற்களே 'ஆ' 'ஆவு' என்ற நெடிற் சொற்கள். திராவிட மொழியில் தனித்தனிச் சொற்கள். இவை வரப்போகின்ற என்ற கருத்தினைத் தருகின்றன - ஆனால் பின்னர் அசையாக வன்றி உபயோகிக்கப்படவில்லை, 'புல்' என்ற சொல்லுடன் 'புல் - அ, புல் - ஆ, புல் - ஆவு' என்றும் 'புல் - அர்' என்றும் உபயோகிக்கப்பட்டுள்ளன.

'புல்' அகநானூற்றில் குறிப்பிட்டது போன்ற **'சிறிய'** என்னும் பொருள் படுகின்றது. 'இலை என்பதுடன் சேர்ந்து சிறிய இலை 'புல் இலை' என்றும் 'அளை,' 'உளை,' 'அறை' என்பதோடு சேர்ந்து 'புல் அளை,' 'புல்லுளை,' 'புல்லறை' என்றும் சிறிய என்ற அர்த்தத்தில் இடம் பெறுகிறது. 'புல்லரை' என்பது 'சிறடி சிறிய பாதங்கள், அல்லது 'செடியின் கிளைகள் என்றும் பொருள் தருகிறது. 'ல்' என்பது 'ம்' என்ற எழுத்தோடு இணையும்போது **'ல் ம்'** என்றும் **'ன்'** என்றும் உரு பெறுகிறது. அதே கொள்கையில் 'எல் - உம் - பு' முதலில் 'எல்ம்பு' என்றும் இறுதியில் 'என்பு' என்றும் 'நாலடியில்' வருவதே. 'என்பு - ஆய்உகினும்' — உழுத்துப்போன கரையிலிருந்து ஒவ்வொரு மரச்சட்டங்களாக வீழ்வதே போன்று, புல்ம்▷**'புன்'** என்றாகி 'சிறிய,' இழிவான, கீழ்த்தரமான' என்று வருகிறது, எல்ம்பு▷'என்பு' ஆகிய விதமே.

''புலப் புன்கோட்டி புலவர் - இடை புக்கு.' இங்கு 'அடி' என்று தமிழில் கூறப்படும் 4 சீர்களிலும் 'பு' என்றது மோனைநயத்துடன் இடம் பெறுவதைக் காணலாம். தென் இந்தியாவில் ஜைனமதம்



பரவிய பின்னர், புலாலையும் புலால் உண்பவரையும் தமிழ் மக்கள் வெறுத்தனர். திருக்குறளில் ''உண்ணாமை வேண்டும் **புலால்'** என்று கூறப்பட்டுள்ளது. 'புலால்' என்ற **இச்சொல்லும்** 'புல்,—' 'இழிவான, இழிந்த, சிறிய' என்ற கருத்தில்தான் இடம் பெறுகிறது. அதே போல், 'புலால்' என்று அகநானூற்றிலும், **'புலா'** என்று பதிற்றுப்பத்திலும், **'புலாம்,'** **'புலாவு'** என்று சென்னை அகராதியிலும் **புலாஒ,** என்று **உருதிலும்,** **'புலவு'** என்று பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை அகநானூறு-ஆகியவற்றிலும், **புலை**—(இழிவு) (—அழுக்கு) என்று மணிமேகலையிலும்: **'புலை** கூர் வேள்வி' என வருவதை நோக்குக.

# X 'தமிழ் எளுவ''

**''மொழியினைக் தறித்த நுண் ஆராய்வு''**

**''லீலா, மங்கையர்க்கரசி, நளா'' எனும் எம் முதல்**

**''மூ புதல்விகளின் அரங்கேற்றம்''**

**வண, ஹ. சி. தாவீதடிகளாரின்**

**சொற்பொழிவு**

**யாழ் - மத்திய வித்தியாலய அரங்கு**

நண்பர்களே, அன்பர்களே, ஈழத்தனைவீரே, தமிழரும் எளுவருமாகியநும் எல்லீர்க்கும் எம் வணக்கம் எஞ்ஞான்றும் ஆகுக! அகராதி, இலக்கண நூல்களுடன் இதுகாறும் 32 மொழிகளைக் கற்றதனால், எம்மனது ஒவ்வொரு மொழியினையும் தீர ஆராய்ந்து, அதின் பதங்களை நுட்பமாகப் பிரிக்கும் வாள் போன்றதாயிற்று. நாலடியார் 386 இன் நான்கு அடிகளைக் கேட்டீரோ?

''உள்ளத்து உணர்வுடையான் ஓதிய நூல் அற்றால்
வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள் — தெள்ளிய
ஆண்மகன் கையில் **அயில்வாள்** அனைத்தரோ
நாண் உடையாள் பெற்ற நலம்?''

இந்த **அயில்வாள்** போன்ற நுண் அறிவினால் யாம் ஆராயுழி, 45 ஆண்டுகளுக்கு முன் எமக்கு ஏற்பட்ட ஐயமுறுதியாகின்றது. சிங்களத்தைக் கேட்டமுதல் நாளே,' இஃதென்னே! எம் தமிழ் மொழியைத்தான் வேறுவிதமாக இவர்கள் உச்சரித்து உதாரணமாகத்

தமிழ் ''இலங்கை''யை 'லங்கா' எனவும், தமிழ் 'இளமையனே' 'ஏமயா' எனவும், தமிழ் 'சீரிய, சீர்' என்பதை 'ஸிரி' உ - ம்: 'ஸிரிஸேன எனவுஞ் சற்று மாற்றி அதைப் புதுமொழி என்கின்றனரே! அங்ஙனமாகில் யாமும் வேறு சிற்சில மாற்றங்களை அமைத்து, வெவ்வேறு திராவிடக்கிளை உண்டாக்கலாமே' என ஏனையோர்க்கு இயம்பினேம். இப்போதோ இதைப்பற்றி எமக்கு ஐயமில்லை; இதுவே எம் உறுதியான கொள்கை.

இதுகாறும் சான்றோர் இங்ஙனம் கூறுப: 19 திராவிட மொழிகள் உள; இவற்றில் தலைசிறந்தது தமிழ் மொழியே!' சென்றமூ ஆண்டுகளின் ஆராய்ச்சியின் பயனுக. இச் சான்றோர் கூற்றை இங்ஙனம் மாற்றி அமைக்கின்றோம்:- சிங்களத்தின் தாய் **எளுவம்**. இதைச் சிங்களவர் 'எளு' 'எளுவ,' 'சுத்த சிங்களம்' என அழைப்பர். உண்மையிலே இஃது எம் இனிய தமிழுக்கடுத்த தங்கை ஆனதினுல் திராவிட மொழிகள் இப்போது 20 ஆகத் தோன்றுகின்றன, 'எளு' என்பது ஆதியில் 'எழு' என இருந்திருத்தல் வேண்டும். இதற்கு அண்மையான பதங்கள் ஆவன: 'எழில், யாழ், யாழ், அழகு, ஈழம்.' (தாம்+ஈழர்-) 'தமிழர்' (தாம்+ஈழ்-) 'தமிழ்', இப்பதங்கள் ஈழ நாட்டின் எழிலையும், தாமீழ (-திராமிள-திராவிட) மக்களின் அகத்தின் அழகையும்' 'பங்கேருகத்தின் மலர்போல் விளங்கும்' வதனங்களையும், தாமே அழகிய (-தம்+இழ்) மொழியின் சான்ற சிறப்பையும் ஒருங்கே குறிப்பன என்பது நும்மெல்லீர்க்கும் தற்போது வெளிப்படையாயிற்றெனயாம் நம்புகின்றனம்.

யாம் தற்போது கூறியவற்றை இப்பொழுது உறுதிப்படுத்துகின்றோம்:-

(அ) அநேக மொழிக் குடும்பங்களின்கண் 'இ' 'எ' என மாறுவது உண்டு. latin 'est—German 'ist'— English 'is'. Latin 'es'. 'cunt' but 'is, it'; ivemus, itis' Tam, ilai': Mal 'ila'. Tel, Kan. 'ela' Sinh: 'elavalu'—leaves, இலை மரக்கறி—leafy vegetables

ஆனதினுல் 'இழ், ஈழ' (தமிழ், தாமீழர்)-ஈழம்'எழு', (rise in splendour) கங்குலின் பின் இருள் நடுவண், எழுவானிற்றோன்றும் இள ஞாயிற்றின் ''**எழில்**'' இந்த 'ஈழ், எழு' என்ப

(ஆ) சமஸ்கிருதம் திராவிடப் பதங்களைக் கி. மு. 1800ஆமாண்டு தொடங்கிக் கொள்ளையடித்து வந்ததென எம் முதற் புதல்வி 'லீலா' காட்டியிருக்கின்றனள். தன் களவை மறைக்க, ஆரியம் தன் கட்டாடிக்குறி' 'Dhoby Mark' ஆகிய ஒரு (T) 'ர்' அன்றேல் (so) 'ஷ்' போன்றவற்றை இப்பதங்கள் நடுவண் புகுத்தலுண்டு. உதாரணமாக, கடு, காடு (தமிழ்) Skkastha—கஷ்ட தாமீழ-Skdramilla:

(இ) ஆரியத்திலும் திராவிடத்திலும் (l) ள் தமக்கை! ண் (n) தங்கை; (d) (l) 'ட்' 'தம்பி. 'அளம்' (-கிட்ட) — 'அண்மை' அண்டை' — 'அட்ட, 'ce' அதேபோல் 'திராமிளம்' '(=Sinh'.



'தெமள') 'திராமிடம்' எனவும் மாறி, அநேக சங்கத நூல்களில் அழைக்கப்படுகின்றது இங்ஙனமே,

(ஈ) '**மண்ணன்**' - வண்ணன் இதைப்போல் 'திராமிடம்' - 'திராவிடம், 'ஆனதினுல் 'தமிழ்' என்பதும் 'திராவிடம்' என்பதும் ஆதியில் ஒன்றே; ஆயினும் திராவிடத்தின் தற்போதைய கருத்து 20 மொழிகளினதாய்; தமிழ் இக்குடும்பத்தின் முதல் மகள்; மலையாளம் இரண்டாவது.

(3) இப்போது 'எளுவம்' மூன்றும் மகள் எனக் காட்டுதும், எமது முதல் நூலாய லீலாவைப் படிக்கும்பொழுது, அதில், அநேக மிடங்களில், வெவ்வேறு திராவிடமொழிகளின் பெயர்களை மாந்தர் கவனித்திருப்பர். உதாரணமாக, 58-ம் பக்கத்தில், 'நிலை, - 'மனத்திலே நிறுத்து, நிற்கப்பண்ணு என்பதை நிருபிப்பதற்குப் பின்வரும் மொழிகளினின்று சான்றுகளை எடுத்தனம்;

1. **தமிழ்** 2. **மலையாளம்** 3. கோதம் 4. துதம் 5. **கன்னடம்** 6. குடகு 7. துளு 8. **தெலுங்கு** 9. கொலமி 10. நைக்கி 11. கோண்டு 12. கொண்ட 13. குயி 14 குவி 15. குருக் அதேபக்கத்தில் 16. மால்தோ 63ஆம் பக்கத்தில் 17. பர்ஜி 63ம் பக்கத்தின் 1-ம் வரியில் 18 கட்பா 19. **பிராஹுயி** (Brahui). இம் மொழிகளின் நடுவண் நெருங்கிய தொடர்புகள் உள என்பதனுல் 1, 2, 5. 8-ம் மொழிகளை சென்ற 25 ஆண்டுகளாகப் படித்தும், 13, 19-ம் பாஷைகளை நான்கு வருஷங்களாக சிற்சில சமயங்களில் வாசித்தும் வருகின்றோம். கடைசியானது பேர்சியா, அப்கானிஸ்தான், பலுக்கிஸ்தான் ஒன்று கூடும் மலைச் சாரல்களில் இப்போதும் 3 இலக்ஷம் சனங்களால் பேசப்பட்டு வருகின்றது. ஆனுல் இது திருத்தமற்றும் அயலிலிருக்கும் வேறு மொழிகளுடன் கவந்தும் காணப்பட்டது. சென்ற வருடத்தின் வைகாசித்திங்களின்கண் சிலாபமேற்றிராணியார். எமக்குத் தேவையான ஒரு சிங்கள - ஆங்கில அகராதியைக் கொண்டுவந்து. பண்டாரவளையில் எமக்கு அளித்தனர். என்னவியப்பு! 1926 ஆமாண்டின் தைத்திங்கள் யாம் சிங்களம் படிக்கத் தொடங்கியும். மற்றைய உடன் சிங்கள மாணுக்கரைக் குருமடத்தில் வினவிப்படித்ததொழிய, ஒருபோதும் இச்சிறந்த அகராதியைக் கண்டிலேம், சில பக்கங்களில் (13ம் - 16ம், உதாரணமாக) அரைவாசிக்கு மேற்பட்ட பதங்கள் தமிழ்மொழிக்குச் சம்பதமானவை மட்டுமன்று, இதனை விளக்க இவை உதவியாயுமிருந்தன.

# Errata. பிழை திருத்தங்கள்

| பக்கம் | வரி | பிழை | திருத்தப் |
|---|---|---|---|
| 1. | 25 | Irag | Iraq, |
| 1. | 32 | 7 | 5 |
| 2. | 12 | Adictionares | A.... dictionaries |
| 2. | 13 | answert | answer |
| 3. | 24 | familys | family, |
| 3. | 27 | tawony | towny |
| 3. | 31 | பொலுய் | பொலுப் |
| 3. | 33 | கிளைமொழிகள் | கிளைமொழிகளின் கண் |
| 4. | 9 | Phatl | Phall |
| 4. | 25 | என்ற சொல் | என்ற நூலில் |
| 5, | 24 | பாய்ந்து | பாய்த்து |
| 6. | 20 | Phd | Ph. D. |
| 6. | 25 | வடமொழியால் | வடமொழியில் |
| 9. | 7 | காண் றேம் | காண்கின்றேம்; |
| 12. | 3 | 31. 12. 71 | 31-3-72. |
| 13. | 15-16 | தமிழகராதியில் | தமிழகராதியின் |
| 13. | 27 | நாமே | தாமே |
| 13, | 30 | திராவிட | ஆரிய, திராவிட |
| 16. | 31 | நோக்காது | நோக்காதது |
| 17. | 38-39 | கதைத்தனன்? | கதைத்தனள்? |
| 18. | 24-25 | இதைத்தடுதல் | இதைத்தடுத்தல் |
| 18. | 29 | அ நானூற்றின் | அகநானூற்றின் |
| 18. | 35 | தெரியு | தெரியும் |
| 19. | 25 | gal ohya | gal oya |
| 19. | 27 | Suro | Surd |
| 19. | 29 | சொனந்த | சொனந்த் |
| 20. | 20 | விறகாரயா | ஸிறகாரயா |
| 20. | 24 | காலகெதியில் | காலகதியில் |
| 21. | 6 | light | tight |
| 21. | 30 | பன்னகையுடன் | புன்னகையுடன் |
| 21. | 38 | Broadased | broadbased, |
| 23. | 13 | பாய்ந்து | பாய்த்து |
| 24. | 2 | நிதிபோன்ற | இவைபோன்ற |
| 24. | 17 | பூன்...பூன்... | புன்...புன்... |
| 25. | 3 | ஒளிமயத்திற்குள் | ஒளிமய்யத்திற்குள் |
| 25 | 27 | பின்னிட்ட் | பின்னிட்ட |



## பிழை – திருத்தங்கள் (Continued)

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 25. | 32 | சொல்லாக | சொல்லுடன் |
| 25. | 35 | பெற்றுள்ளன | பெற்றுள்ளது. |
| 26. | 2-3 | பெறுகின்றன | பெறுகின்றது |
| 26, | 10 | புலவுதீ | புலவுதி |
| 27. | 9 | abstracts | abstract |
| 27. | 11 | madoew | mead |
| 27. | 11 | கவிதைகளாலும் | கவிதைகளிலும் |
| 27. | 13 | our | ow |
| 27. | 22 | mead w | meadow |
| 27. | 27 | Candes | Candeo |
| 27. | 28 | m asure | measure |
| 28. | 5 | என்ற | என்று |
| 28. | 14 | சொற்கள் திராவிட | சொற்கள் தொல்திராவிட |
| 28. | 29 | கரையிலிருந்து | கூரையிலிருந்து |
| 30. | 16 | யாழ், யாழ் | யாழ். யாழ, |
| 30. | 27 | iv emus | ivimus |
| 30. | 35 | அன்றேல் (so) | அன்றேல்(sh) |
| 30. | 37 | Skkastha | Sk Kastha |
| 30. | 37 | Skdramiila | Sk dramila |
| 30. | 40 | 'அட்ட, 'Ce° | அட்ட |
| 31. | 8 | காட்டுதும், | காட்டுதும். |
| 31. | 25 | கவந்தும் | கலந்தும் |
| 31. | 27 | றிராணியார். எமக்குத் | றிராணியார் எமக்குத் |

இந்நூலின் விலை ரூபா ஒன்று Rupee 1.